# இயேசு அழைக்கிறார்

YESU AZHAIKIRAR - TAMIL MONTHLY - APRIL 2025
VOL. 23 ISSUE 1 - 36 PAGES - Rs. 21/-

ஏப்ரல் 2025



கர்த்தரிடத்தில்
மனமகிழ்ச்சியாயிரு;
அவர் உன் இருதயத்தின்
**வேண்டுதல்களை**
உனக்கு அருள்செய்வார்.
(சங்கீதம் 37:4)


# முழு இரவு அற்புத ஜெபம்













விடுதலை மற்றும் செழிப்புக்கான முழு இரவு அற்புத ஜெபம் 2025 பிப்ரவரி 27ம் தேதி இரவு 10 முதல் மறுநாள் அதிகாலை 4:30 மணி வரை, சென்னை சகோ.டி.ஜி.எஸ். தினகரன் நினைவு ஜெப கோபுரத்திலுள்ள பால் அரங்கில் நடைபெற்றது. சென்னையில் மட்டும் 1,500 பேர் இதில் கலந்துகொண்டனர். இதே நேரத்தில் இந்தியா முழுவதும் 85 ஜெப கோபுரங்களில் நடைபெற்ற ஜெபத்தில் மொத்தம் 6,000 பேர் கூடி தேவன் அருளும் விடுதலையையும் ஆசீர்வாதங்களையும் நாடி ஜெபித்தனர்.

மக்களை தேவனுடைய பாதத்தில் காத்திருக்கச் செய்து, அவர்கள் தங்கள் கட்டுகள் மற்றும் வியாதிகளிலிருந்து விடுதலையை பெற்றுக்கொள்ளும்வண்ணம் தேவ பிரசன்னத்திற்குள் வழிநடத்துவதே இக்கூட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். இந்த ஜெபத்தில் கலந்துகொண்ட அநேகர் சுகத்தையும், பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதையும் குறித்தும் மற்றும் தீர்க்கதரிசன வார்த்தைகள் நிறைவேறியது குறித்தும் சாட்சி கூறினர். அது மக்களின் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் பெலப்படுத்தியது.

Dr. பால் தினகரன் குடும்பத்தினர் ஊக்கமாக ஜெபித்தனர்; ஆராதனை நடத்தினர்; வல்லமையான தேவ செய்தியை பகிர்ந்துகொண்டனர். சகோதரி ஸ்டெல்லா தினகரன், நீதிமொழிகள் 10:22 என்ற வசனத்தை கூறி, பாரங்கள் அகற்றப்படுவதற்காக ஊக்கமாக ஜெபித்தார்கள். Dr. பால் தினகரன், வல்லமையான செய்தியளித்ததுடன், பிசாசின் பிடியிலிருந்து விடுபடவும், சரீர வியாதிகளிலிருந்து சுகம் பெறவும், இருளின்மேல் தேவனுடைய அதிகாரத்தை உரைத்து ஜெபித்தார். சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன், சங்கீதம் 118:15, அப். 10:24; 16:31 ஆகிய வசனங்களின் அடிப்படையில் குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காக ஜெபித்தார்கள். சகோ. சாமுவேல் தினகரன், வாலிபர்களும் சிறுபிள்ளைகளும் தெய்வீக ஞானத்தையும், சவால்களின்மேல் ஜெயத்தையும் பெற்றுக்கொள்ளும்படி ஜெபத்தை நடத்தினார்.

Dr. பால் தினகரன் குடும்பத்தினர், அனைத்து ஜெப விண்ணப்பங்கள் மேலும், குறிப்பாக, தீவிர உடல்நிலை பாதிப்பில் உள்ளவர்களுக்காகவும், புற்றுநோயுடன் போராடிக்கொண்டிருக்கும் ஒரு தாயாருக்காகவும் சிறப்பு பிரார்த்தனை ஏறெடுத்தனர். வந்திருந்தவர்கள் சுகத்தையும், சீர்ப்படுத்துதலையும் செழிப்பையும் பெற்றுக்கொள்ளும்வண்ணம் தேவ வாக்குத்தத்தங்களை உரைத்தனர்.

தேவனுடைய பிரசன்னமும் தயவும் தங்கள்மேல் தொடர்ந்து விளங்கும் என்ற நம்பிக்கையுடன் மக்கள் புதிய நம்பிக்கையை, ஆவிக்குரிய பெலனை பெற்றுக்கொண்டனர். தேவனுக்கே மகிமை.

## 2025 - 2027 கால கட்டத்திற்கான பணிகள்

- ஒவ்வொரு நகரத்திலும் / ஜெப கோபுர பகுதியிலும் 1,000 ஜெப வீரர்களை எழுப்புதல்
- நாடு முழுவதும் 500 வாலிபர் ஊழிய பொறுப்பாளர்களை உருவாக்குதல்
- மாவட்டத்திற்கு ஒன்றாக, 800 ஜெப கோபுரங்களை ஸ்தாபித்தல்
- குறைந்தது ஒரு அஞ்சலக பகுதிக்கு (PIN Code) ஒருவர் என 12,000 ஸ்தானாபதிகளை எழுப்புதல்
- இந்தியா முழுவதும் 500 ஆலயங்கள் கட்டப்பட உதவுதல்

# தேவன் கொடுத்த பணிகளில் 'இயேசு அழைக்கிறார்' ஊழியம் முன்னேறிச் செல்கிறது



**இந்த தரிசனத்தை நிறைவேற்றுவதற்கு கீழ்க்காணும் செயல்பாடுகளை நடத்துகிறோம்**

- நாடு முழுவதும் ஜெப வீரர்களை எழுப்புதற்காக ஜெப கோபுரங்களிலும் இணையவழியிலும் பங்காளர் பயிற்சி திட்டங்கள்
- நாடு முழுவதும் வாலிபர் ஊழிய பொறுப்பாளர்களை உருவாக்குவதற்காக அனைத்து ஜெப கோபுரங்களிலும் வாராந்திர UTurn கூட்டங்கள்
- தேவனுக்காக அனைத்து மாவட்டங்களையும் சந்திப்பதற்கு நாடு முழுவதும் ஜெப கோபுரங்களை கட்டுதல்
- நாடு முழுவதும் போதகர் மாநாடுகளை நடத்துதல்

இந்தப் பணிகளை செய்துமுடிப்பதற்கு உங்கள் ஜெபங்கள், பங்கேற்பு மற்றும் உதாரத்துவமான ஆதரவு ஆகியவை அவசியமாகும்.

பூமியில் தேவ ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் பணியில் நாம் இணைந்து முன்னேறுவோம்

## நீங்கள் எப்படி ஈடுபடலாம்

எங்கள் பயிற்சிகளில் இணைந்திடலாம். இணையதளம் https://academy.prayertoweronline.org/
அல்லது QR codeஐ ஸ்கேன் செய்து இணையலாம்
வாராந்திர UTurn கூட்டங்களில் கலந்துகொள்ளுங்கள். உங்கள் பகுதியிலுள்ள ஜெப கோபுரங்களுக்குச் செல்லுங்கள்.
ஜெப கோபுரங்களின் முகவரிகள்: https://www.jesuscalls.org/prayer-towers
ஜெபத்தின் மூலமும் காணிக்கையின் மூலமும் இந்த ஊழியப்பணிகளை தாங்குங்கள்
எஸ்தர் ஜெபக்குழு மற்றும் எக்காள ஜெபக்குழு போன்ற எங்கள் ஜெபக்குழுக்களில் சேர்ந்து,
ஊழிய முயற்சிகளுக்காக எங்களுடன் இணைந்து ஜெபியுங்கள்.
ஊழியத்திற்கு எளிதான விதத்தில் காணிக்கை கொடுக்கும் வழிகளை 15ம் பக்கத்தில் காணலாம்
அல்லது QR Codeஐ ஸ்கேன் செய்து வழங்கலாம்.



# ஜெயம் பெறுங்கள்

அன்பானவர்களே,

இது உங்களுக்கு ஜெயத்தின் மாதமாகும். "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (1 கொரிந்தியர் 15:57) என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது. இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவன் உங்களுக்கு ஜெயத்தை அளிப்பதாக கூறுகிறார். இயேசு கிறிஸ்து மரணத்தின் கூரை ஜெயித்தார்; மரணத்தைக் கொண்டு வரும் பாவத்தை வென்றார்.

அவர் மரணத்தின் வல்லமையையும் இருளின் வல்லமையையும் அழித்து, மூன்றாம் நாளில் ஜெயத்தோடு எழுந்தார். அவர் சகல வல்லமையும் கொண்ட ஆண்டவராக இருக்கிறபடியினால் ஜெயம் பெற்றார். அவர் எல்லாவற்றின்மேலும், எல்லா ஜனங்கள்மேலும் ஆளுகை செய்கிறவராக இருக்கிறார்.

---

அந்த மகா பெரிய தேவன் இந்த மாதத்திலும் உங்களோடு இருக்கிறார். "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" (எபிரெயர் 13:5) என்று அவர் வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆகவே இயேசுவுக்கு நேராக கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்.

அவர் உங்களோடு உலாவி, உங்கள் வாழ்வின் எல்லாப் பகுதியிலும் உங்களுக்கு வெற்றியை அருளிச்செய்வார். தேவன் எந்தெந்தவிதங்களில் வெற்றியைக் கொடுப்பார் என்று நாம் தியானிக்கலாம்.

### உங்கள் சத்துருவுக்கு எதிராக வெற்றி

சத்துருக்கள் பல்வேறுவிதங்களில் எழும்பி வரலாம். சிலர் உங்கள் சொந்த வீட்டாராக இருக்கலாம் (மீகா 7:6). இன்னும் சிலர் நீங்கள் இயேசுவின் நாமத்தை தரித்திருப்பதினால் உங்களை வெறுக்கலாம் (யோவான் 15:18). வேறு சிலர் காரணமே இல்லாமல் உங்கள்மீது பொறாமை கொண்டு உங்களை வெறுக்கலாம் (சங்கீதம் 69.4). அந்த எதிரிகளுடைய வல்லமை எப்படி இருந்தாலும் இயேசுவின் சுபாவமும் அவருடைய பிரசன்னமும் உங்களை மாற்றுவதற்கு நீங்கள் அனுமதிக்கும்போது, அந்த சத்துருக்களின் வல்லமை ஒன்றுமில்லாமல் போகும்.

இந்த எதிரிகளை மேற்கொண்டு வெற்றியை பெற்றுக் கொள்வதற்கான மூன்று முக்கியமான வழிகளை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

### மன்னிக்கும் இருதயம்

"**ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார்**" (நீதிமொழிகள் 16:7) என்று வேதம் கூறுகிறது. மன்னிக்கிற இருதயம் தேவனுக்குப் பிரியமானதாக இருக்கிறது.

அப்படிப்பட்ட இருதயம், "**எங்கள் தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு**" (தானியேல் 9:10) என்று வேதம் கூறுகிறபடியால், தேவனுடைய சுபாவத்தோடு நேரடியாக இசைந்திருப்பதாக உள்ளது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுகிற வேளையை நாம் பார்த்தோமானால், அவர் அத்தனை பாடுகளின் மத்தியிலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட மன்னிப்பை விளங்கப்பண்ணினார். அவரை நிந்தித்து அழிக்கும்படி சத்துருக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். பிரதான ஆசாரியர்கள் பொறாமையினால் அவர்மீது பொய்யாய் குற்றம் சாட்டினார்கள். சிலுவையில் அவருக்குப் பக்கத்தில் தொங்கிய கள்ளன் அவரைக் குற்றஞ்சாட்டினான். அந்த வழியாகச் சென்ற, அவர் யாரென்றே தெரியாத ஜனங்கள் அவரை அவமதித்து நிந்தித்தார்கள்.

இந்த எல்லா வேதனையிலும், கூடுதலாக ரோமச் சேவகர்கள் அவரை சவுக்கால் அடித்தனர். அவர் குற்றமற்றவராக இருந்தபோதும் தங்கள் கடமையை நிறைவேற்றும்படி அவரை சிலுவையில் அறைந்தார்கள். இந்த எல்லா மனரீதியான, உணர்வுரீதியான, சரீரப்பிரகாரமான வேதனையின் மத்தியிலும், இயேசு, கோபத்துடனோ அல்லது பழி வாங்கும் நோக்கத்துடனோ அல்லாமல் அன்பாக பேசினார். அவர், "**பிதாவே, இவர்களுக்கு**



Dr. பால் தினகரன் - paul@jesuscalls.org



Pauldhinakaranofficial

**மன்னியும் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கி றார்கள்**" என்று கூறினார். எல்லாவற்றையும் சகித்துக்கொள் ளும் கிறிஸ்துவின் சுபாவத்தைக் கண்ட ரோம நூற்றுக்கு அதிபதி அவருக்கு விரோதியாக இருந்தாலும், இறுதியில் 'மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்' என்று சாட்சி கொடுத்தான்.

அன்பானவர்களே, இது எவ்வளவு பெரிய சாட்சியாக இருக்கிறது. அவருடைய விரோதி அவருடன் சமாதானம் பண்ணிக்கொண்டு அவரைக் கனம்பண்ணினான். இதே கிருபை உங்களுக்கும் அருளப்பட்டுள்ளது. நீங்களும் உங்களை அநியாயமாகக் குற்றம் சாட்டுகிறவர்களை மன்னிப்பதன் மூலம் அவர்களுடைய கிரியைகளை அழித்து பகைமையின் சங்கிலிகளை அறுத்தெறிய முடியும்.

ஒரு உண்மை வாழ்க்கை சம்பவத்தை உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன். ஜேம்ஸ் என்ற வாலிபன் இருந்தான். அவனது குடும்பம் உடைந்துபோயிருந்தது. ஆகவே அவன், கோபத்தையும் புறக்கணிப்பையுமே கண்டு வளர்ந்தான். பதினெட்டு வயதானபோது அவன் குற்றவாளிகள் கும்பலுடன் சேர்ந்து, குற்றச் செயலில் ஈடுபட்டான்; மிகப் பெரிய வன்முறை களை செய்தான். ஒரு நாள் அவன் கொள்ளையடிக்கச் சென்றபோது, அங்கேயிருந்த மைக்கேல் என்ற கடைக்காரரை தாக்கினான். அந்தத் தாக்குதலில் மைக்கேல் உயிர்தப்பி னாலும் மனதிலும் உடலிலும் புண் பட்டார்.

“
உங்களுக்கு வெற்றி நிச்சயம் என்று இயேசு கிறிஸ்து உரைத்திருக்கிறார்

பக்தியுள்ள மனிதனான மைக்கேல், ஜேம்ஸுடன் போராடுவ தற்குப் பதிலாக அவனை மன்னிக்க முடிவு செய்தார். ஒரு நாள் அவர் ஜெபித்துக்கொண்டிருந்தபோது, "நான் உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் மன்னியுங்கள்" என்ற இயேசுவின் வார்த்தை அவருடைய இருதயத்தில் பேசியது. அவர் முதலில் தயங்கினாலும், பிறகு அதற்குக் கீழ்ப்படிந்தார். ஜேம்ஸ் கைது செய்யப்பட்டு அவனுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டபோது, மைக்கேல் அவனைச் சிறையில் சென்று பார்க்க முடிவு செய்தார். அவர் ஜேம்ஸுக்கு எதிரே அமர்ந்திருந்தார். அவருடைய கை நடுங்கிக்கொண்டிருந்தது. "ஆனால், அவர் நான் உன்னை மன்னித்துவிட்டேன். அது எளிதான காரியம் என்பதினால் அல்ல. முதலாவதாக இயேசு என்னை மன்னித்திருக்கிறார். அதனால், நானும் உன்னை மன்னித்தேன்" என்றார். இதைக்கேட்ட ஜேம்ஸ் திகைத்துப் போனார். வாழ்க்கையில் அதுவரைக்கும் அவனுக்கு யாரும் இரக்கம் காட்டவில்லை. அனைவரும் அவனைப் புண்படுத் தினர். மைக்கேல் தொடர்ந்து ஜேம்ஸைச் சென்று பார்த்துக் கொண்டிருந்தார். கிறிஸ்துவின் அன்பை அவனோடு பகிர்ந்துகொண்டார்.

காலம் செல்லச் செல்ல ஜேம்ஸின் மனம் இளகியது. அவன் தன்னுடைய பாவங்களை அறிக்கையிட்டு வருத்தத்தைத் தெரிவித்தான். மைக்கேல் தொடர்ந்து அவனுக்கு அன்புகாட்டி வந்தபடியினால், தேவனுடைய கிருபையை ஜேம்ஸ் பெற்றுக்கொண்டான். தன்னுடைய வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு கொடுத்தான். பழைய வழிகளை விட்டு மனம் திரும்பினான். இப்போது ஜேம்ஸ் ஒரு போதகராக, தன்னைப்போல அழிவின் பாதையில் செல்கிற இளம் வாலிபர்கள் மத்தியில் ஊழியம் செய்து கொண்டு இருக்கிறான்.

மன்னிப்பின் வல்லமையையும், உடைந்துபோன வாழ்க்கையை தேவனால் மீண்டும் கட்ட முடியும் என்பதை யும் இது காட்டுகிறது. ஆம், தடைகளைத் தகர்க்கக்கூடிய, இருதயங்களை மாற்றக்கூடிய, உங்கள் எதிரிகளின் கிரியைகளை மடங்கடிக்கக்கூடிய வல்லமை மன்னிப்புக்கு உண்டு. முடியாது என்று காணப்படும் நிலையிலும், மற்றவர்களை மன்னிக்கக்கூடிய கிருபையை தேவன்தாமே உங்களுக்குத் தந்தருள்வாராக. இப்போது இந்த பலனை உங்களுக்குத் தருவார் என்று நம்பி அவரிடம் கேளுங்கள். மன்னிப்பின் மூலம் ஜெயத்தையும், ஆண்டவர் அருளும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

### தேவனில் களிகூர்ந்து அவரைத் துதித்தல்

விரோதிகளைத் தோற்கடிப்பதற்கு இது இன்னும் சிறந்த வழியாகும். தேவனின் அன்பு வல்லமைமிக்கது என்பதை மறந்துபோகாதீர்கள். இந்த அன்பு உங்களோடு இருக்கும் போது, அது எல்லா சாபங்களையும், பொய்யான குற்றச்சாட்டுகளையும், எதிரிகள் கொண்டு வருகின்ற எல்லா குற்றச்சாட்டுகளையும் முறியடித்து அவற்றை உங்களுக்கு ஆசீர்வாத மாக மாற்றும்.

தேவன் உங்கள்மீது மிகுந்த அன்புகொண்டு உங்கள் சத்துருக்க ளுக்கு முன்பாக உங்களுக்கு ஒரு பந்தியை ஆயத்தம் பண்ணுகிறார் (சங்கீதம் 23:5). அவர் உங்களைப் பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கிறார். அவருடைய ஆசீர்வாதம் உங்கள் வாழ்வில் புரண்டோடும். ஆகவே, ஆண்டவருக்குள் களிகூருங்கள்.

ஜெசிகா என்னுடைய சகோதரி மிகுந்த விசுவாசமுள்ள பெண்ணாக இருந்தார்கள். ஆனால், அதுவரைக் கும் அவர் சந்தித்திராத சோதனை அவர்களைத் தாக்கியது. அவர்கள் வேலை செய்கிற இடத்தில் அவர்கள்மீது பொய்யான குற்றஞ்சாட்டினார்கள். அவர்களுடைய நற்பெயருக்கு களங்கம் உண்டாயிருந்தது. அவர்களுடன் பணியாற்றிய வர்கள், அவர்கள் நம்பியவர்களே அவர்களுக்கு துரோகம் செய்தார்கள். இந்த மன உளைச்சலின்போது, ஜெசிகா விசுவாசத்தில் உறுதியாக இருந்து, "என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது" (சங்கீதம் 23:5) என்ற வசனத்தை மறுபடியும் மறுபடியும் தியானித்துக்கொண்டே இருந்தார்கள்.

ஒரு நாள் மாலை வேளையில் ஜெசிகா ஜெபித்துக்கொண் டிருந்தபோது, ஜெபிப்பதை விட்டுவிட்டு துதிக்க ஆரம்பிக்க வேண்டும் என்று உணர்ந்தார்கள். அது பொருத்தமில்லாத தாக தோன்றினாலும் தேவனுடைய நன்மையை எண்ணி அவர்கள் களிகூர்ந்து அவருடைய அன்புக்காக, பாதுகாப்புக் காக, அவர் தரும் அருட்கொடைக்காக அவரை ஸ்தோத்திரித் தார்கள். துதியின் பாடல்களைப் பாடி, ஆண்டவருடைய வாக்குத்தத்தங்களை அறிக்கை செய்தபோது, நம்ப முடியாத

ஒரு செய்தி அவர்களுக்கு கிடைத்தது.

அலுவலகத்தில் அவர்களைப் பற்றி நடந்த விசாரணையில் அவர்கள் பெயரில் இருந்த குற்றச்சாட்டுகள் அனைத்தும் நீக்கப்பட்டது தெரிய வந்தது. அவர்களுடைய உண்மை நிரூபிக்கப்பட்டது மட்டுமல்ல, அவர்கள் விசாரணைக்கு ஒத்துழைத்ததன் காரணமாக, நிறுவனத்தினர் அவர்களுக்கு பதவி உயர்வும் கொடுத்தார்கள். அவர்களுக்கு விரோதமாக தவறு செய்த அவர்கள் உடன் பணியாளர்கள் இதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். சிலர் வந்து அவர்களுக்கு விரோதமாக தாங்கள் செயல்பட்டதற்காக மன்னிப்பு கேட்டார்கள். ஜெசிகா, இது தன்னால் ஆனதில்லை. தேவனுடைய அன்பின் மூலமாக, வல்லமையின் மூலமாக இந்தச் சூழ்நிலை மாறியது என்று அவர்கள் அறிந்திருந்தார்கள்.

தேவனுடைய ஆசீர்வாதம் அவர்கள் வாழ்வில் நிரம்பி வழிந்தது. அவர்களுடைய இந்த வாழ்க்கை சம்பவம் தேவனில் களிகூருவதன் மூலமாக விரோதிகளை தோற்கடிக்க முடியும் என்பதற்கு சாட்சியாக விளங்கியது. அவர்கள் தன்னுடைய அனுபவத்தை மற்றவர்களுக்கு சொல்லி, தேவனுடைய கிருபையைக் குறித்து, அவரில் களிகூருவது குறித்து, எப்படிப்பட்ட புயல்கள் வந்தாலும் அவரைத் துதிப்பது குறித்து மற்றவர்களை உற்சாகப்படுத்தினார்கள்.

அன்பானவர்களே, நீங்கள் எந்தச் சூழ்நிலையாக இருந்தாலும், சூழ்நிலையைக் கருதாமல் ஆண்டவருக்குள் களிகூரும்போது அவர் உங்களுக்காக அற்புதம் செய்வார். அவர் உங்கள் சத்துருக்கள் முன்னிலையில் உங்களுக்கு ஆசீர்வாதத்தின் பந்தியை ஆயத்தம் பண்ணுகிறார். உங்கள் வாழ்க்கையை கனத்தினாலும் தம்முடைய தயவினாலும் நிரப்புகிறார்.

### கீழ்ப்படிதல்:

தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவற்றை செய்வதோடு, பெற்றோருக்குக் கீழ்ப்படிவதும் சத்துருக்களை ஜெயிக்க உதவும். தேவன் ஈட்டியினாலும் பட்டயத்தினாலும் மட்டும் இரட்சிக்கிறவர் அல்ல. நீங்கள் அவருக்குக் கீழ்ப்படியும் போது அவர் உங்களை இரட்சிக்கிறவராக இருக்கிறார்.




தினமும் சிறிய காரியங்களோ, பெரிய காரியங்களோ, தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும்போது, உங்களால் உங்கள் விரோதிகளை ஜெயிக்க முடியும். தேவன் உங்களை என்ன செய்யச் சொல்லியிருக்கிறாரோ அதை நீங்கள் பின்பற்றும்போது, வேதத்தின் மூலமாக, தீர்க்கதரிசனத்தின் மூலமாக உங்களை என்ன செய்யச் சொல்லுகிறாரோ அதை நீங்கள் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. தானியேல் ராஜாவின் கட்டளையினால் தடை செய்யப்பட்டிருந்தபோதும், தினமும் மூன்று வேளை உண்மையாக தேவனிடத்தில் ஜெபித்து அவருக்குக் கீழ்ப்படிந்தான்.

அவன் இப்படி தேவனுக்குக் கீழ்ப்படிந்ததினிமித்தம் அவனுடைய விரோதிகள் அவனைச் சிங்கக் கெபிக்குள் போட்டனர். ஆனால் தேவன் தமது தூதனை அனுப்பி, சிங்கங்களுடைய வாயைக் கட்டினார். தானியேல் எந்தத் தீங்கும் இல்லாமல் மீட்கப்பட்டான். அவனுடைய கீழ்ப்படிதல் அவனை இரட்சித்தது; அவனைக் காத்தது மட்டுமல்ல இன்னும் உயர்வான பதவிக்கு ராஜா அவனை உயர்த்தும்படி செய்தது. அதற்குப் பிறகு அவனுக்கு எதிரிகள் யாரும் இல்லை. என்ன ஒரு வெற்றி. ஆகவே, தேவனுக்கும், அவருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படிவது முக்கியமானதாக இருக்கிறது.

வேதம், பெற்றோருக்குக் கீழ்ப்படிவதன் அவசியத்தை, "பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்" (எபேசியர் 6:1) என்று கூறுகிறது. இந்தக் கீழ்ப்படிதல், இராட்சதர் போன்ற விரோதிகளையும் முழங்கால்படியிடும்படி செய்யும். தாவீதின் உதாரணத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அவனுடைய தகப்பன் இஸ்ரவேலரின் சேனையிலிருந்த அவனுடைய சகோதரருக்கு உணவைக் கொடுத்து வரும்படி அவனை அனுப்பினார். தாவீது தயங்காமல் அதற்குக் கீழ்ப்படிந்தான். அவன் அங்கே இருக்கும்போது கோலியாத்தைப் பார்த்தான். இஸ்ரவேலரின் சேனைகளையும் கர்த்தருடைய நாமத்தையும் நிந்தித்த கோலியாத்தை அவன் கண்டபோது, தேவனால் பலப்படுத்தப்பட்டு கோலியாத்தை ஜெயித்தான். ஒரு கவணைக்கொண்டும், கல்லின் மூலமாகவும் அவனை மடங்கடித்தான். தகப்பனுடைய உத்தரவுக்குக் கீழ்ப்படிந்தது, மிகப்பெரிய வெற்றிக்கு வழிவகுத்து, ஜனங்களுடைய பார்வையில் அவனுக்கு மிகுந்த கனத்தைக் கொடுத்தது.

அன்பானவர்களே! தேவனுக்கும், பெற்றோரின் வார்த்தைகளுக்கும் கீழ்ப்படிந்து கனம்பண்ணும்போது நம்முடைய எதிரிகள் அனைவரும் அழிக்கப்படுவார்கள். ஆண்டவருக்கு விரோதமாகவும் நம்முடைய வாழ்வில் அவருடைய சித்தம் நிறைவேறவும் எதிராக இருக்கும் அத்தனை சத்துருக்களும் அகற்றப்படுவார்கள்.

இந்த மாதத்தில் நீங்கள் ஜெயித்துப் பெற்றுக்கொள்ளக் கூடிய இன்னொன்று,

### உபத்திரவங்களின்மேல் வெற்றி

"**நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்**" (சங்கீதம் 34:19) என்று வேதம் நமக்கு உறுதியாக கூறுகிறது. நம்முடைய விசுவாசத்தையும் கிறிஸ்துவுடனான நம்முடைய உறவையும் சோதிக்கும்படியாக உபத்திரவங்களும் துன்பங்களும் அடிக்கடி நமக்கு நேரிடுகின்றன. அந்த நேரங்களில், "நான் நீதியாக வாழ்வதற்கு பிரயாசப்பட்டு, ஏன் எனக்கு இவ்வளவு பாடுகள்?" என்று நீங்கள் திகைக்கலாம். "நான் உதாரகுணம் உள்ளவனாக இருக்கும்போது, உண்மை உள்ளவனாக இருக்கும்போது, ஏன் என் வாழ்வில் குறைவுகள் காணப்படுகிறது?" என்று நீங்கள் திகைக்கலாம். இதுபோன்ற கேள்விகள் உங்கள் இருதயத்தில் பெரிய பாரத்தைக் கொடுத்து, தேவனுடைய அன்பிலிருந்து உங்களை விலக்குவதற்கு முயற்சிக்கலாம்.

யோபுவின் வாழ்க்கையைப் பாருங்கள். மிகுந்த துன்பங்களை அனுபவித்த வேதாகம கதாபாத்திரங்களில் அவனும் ஒருவன். எண்ணிப் பார்க்க முடியாத பாடுகளை அவன் சகித்தான். யோபுவின் ஆசீர்வாதங்களை எடுத்துப்போட்டால், அவன் விசுவாசத்தை விட்டுவிடுவான் என்று பிசாசு

தேவனிடம் சவால் விட்டான். அவனுக்குத் தொடர்ந்து வந்த இழப்புகள் மத்தியில் யோபு தன்னுடைய ஆஸ்தி, பிள்ளைகள், ஆரோக்கியம் எல்லாவற்றையும் இழந்தான். இந்த மிகுந்த உபத்திரவங்களின் மத்தியில் யோபு, தேவன்மேல் நம்பிக்கையுள்ளவனாக, ''கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்'' (யோபு 1:21) என்று கூறினான்.

விசுவாசத்தை கைவிட்டு, தேவனை சபித்து ஜீவனை விடும்படி அவனுடைய மனைவி அவனை வற்புறுத்திய போதும், யோபு தன்னுடைய விசுவாசத்தில் உறுதியாக நின்றான். அவன் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்ய மறுத்துவிட்டான். அதன் காரணமாக தேவன் அவனுக்குரிய ஆசீர்வாதங்களை மீண்டும் கொடுத்ததோடு, அவற்றை இரட்டத்தனையாக கொடுத்தார்.

அதுவரைக்கும் அவனைக் கேலி செய்தவர்கள், அவனைக் குற்றம் சாட்டியவர்கள், தேவன் யோபுவைக் கனப்படுத்திய விதத்தைப் பார்த்து அமைதலானார்கள். இதைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல், ''உமதுநிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார் உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்க மாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்'' (ரோமர் 8:35-39) என்ற வேத பகுதியில் தைரியமாக அறிக்கை செய்கிறான். இது எவ்வளவு வல்லமையான கூற்றுப் பாருங்கள்.

> “
> **எதிர்ப்புகள் எழும்பும்போது களிகூருங்கள்**

இயேசுவின் அசைக்க முடியாத அன்பின்மீது நீங்கள் திடநம்பிக்கை வைக்கும்போது, இந்த உலகத்தின் உபத்திரவங்களுக்கு மேலாக உயர்த்தப்படுவீர்கள் (1 யோவான் 5:4) என்று வேதம் கூறுகிறது. தேவனுடைய அன்பு உங்களுக்குள் இருக்கும்போது, பிசாசின் தாக்குதல்களும் இந்த உலகத்தின் உபத்திரவங்களும் உங்கள் இதயத்திற்குள் இருக்க முடியாது. ஆகவே நீங்கள் மிகப் பெரிய வெற்றியைப் பெறுவீர்கள். ஜெயம்கொள்ளுகிறவர்கள் கிறிஸ்துவினுடைய நித்திய மகிமையை சுதந்தரிப்பார்கள் என்று வேதம் கூறுகிறது (வெளி. 3:21).

''**கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக**'' (1 பேதுரு 5:10) என்றும், ''இரட்டிப்பான நன்மையைத் தருவேன், இன்றைக்கே தருவேன்'' (சகரியா 9:12) என்றும் வேதம் கூறுகிறது. உங்கள் வேதனை எவ்வளவு கொடியதாக இருந்தாலும், தேவன் உங்களுக்கு இரட்டிப்பான சீர்ப்படுத்துதலை தருவார்; உங்கள் சுதந்தரத்தைத் திரும்ப தருவார். ''**நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்**'' (சங்கீதம் 34:19) என்ற வேத பகுதி, ரேச்சல் என்ற சகோதரிக்கு மிகுந்த ஆறுதலாக இருந்தது. அது, அவர்கள் பாட்டி அடிக்கடி கூறுகின்ற வசனம். அவர்கள் வாழ்க்கையில் ஒரு பெரிய புயல் வீசியபோதும் இந்த வசனம் அவர்களை நிலைத்திருக்கும்படி செய்தது. அவர்களுடைய 35 வயதில் புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களுக்கு இரண்டு குழந்தைகள். அவர்களுடைய வாழ்க்கை உபத்திரம் மிகுந்ததாக, கொடிய சிகிச்சையின் வழியாகக் கடந்துபோவதாக மாறியது. ஆனாலும், ஆண்டவருடைய வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொண்டார்கள்.

உறங்க முடியாமல் அழுத அவர்கள், இந்த உபத்திரம் தனக்கு ஏன் வந்தது என்று கேள்வியும் கேட்டார்கள். ஆனால், ரேச்சல் தனியாக இல்லை. அவர்களுடைய சபையினர் ஒரு குடும்பமாக வந்து, அவர்களுக்கு உணவு கொடுத்து, அவர்களுக்காக ஜெபித்து, அவர்கள் பிள்ளைகளைக் கண்காணித்து அவர்களுக்கு உதவி செய்தார்கள். அவர்கள் தேவனை சார்ந்திருந்தபோது, தினந்தோறும் அவர்களுடைய விசுவாசம் ஸ்திரப்பட்டது. ஒவ்வொரு நாளும் காலையில் அவர்கள், ''ஆண்டவரே, என்னை விடுவியும்'' என்று மெல்லிய குரலில் ஜெபிப்பார்கள். மாலை வேளையில், அன்றைக்கு அவர்களுக்கு பெலன் கொடுத்ததற்காக அவரை ஸ்தோத்திரிப்பார்கள்.

மாதங்கள் பல கடந்தன. அவர்களுடைய புற்றுநோய் குணமாகிறது என்ற செய்தி கூறப்பட்டது. அது கொடிய வேதனையின் பாதையாக இருந்தாலும், ஆண்டவர் உண்மையுள்ளவர் என்பது அவர்களுக்கு வெளிப்பட்டது. ஒரு ஞாயிற்றுக்கிழமை அவர்கள் ஆலயத்தில் தன்னுடைய சாட்சியைப் பகிர்ந்துகொண்டார்கள்.

''ஆண்டவர், நமக்கு இக்கட்டு இல்லாத வாழ்க்கையைத் தருவதாக வாக்குக் கொடுக்கவில்லை'' என்று அவர்கள் கூறியபோது அவர்கள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. ''ஆனால் நம்மை விடுவிப்பதாக அவர் வாக்குப்பண்ணியிருக்கிறார். நான் அதற்கு சாட்சியாக வாழ்கிறேன்'' என்று அவர்கள் கூறினார்கள்.

ரேச்சலின் அந்த வாழ்க்கைச் சம்பவம், தேவன் இன்றும் எல்லா உபத்திரவங்களிலிருந்தும் அவருடைய பிள்ளையாகிய நம்மை விடுவிக்கிறவராக இருக்கிறார்; அவர் ஜீவிக்கிறார் என்பதற்கு சாட்சியாக மாறியது. தேவன் உங்களுக்கும் இப்படியே வெற்றியைத் தருவார். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. கிறிஸ்துவுக்குள் ஏற்கனவே உங்களுக்கு வெற்றி நிச்சயிக்கப்பட்டுள்ளது.

தேவன் உங்களுக்கு வாக்குப்பண்ணுகிற இன்னொரு வெற்றி,

### பொல்லாத ஆவிகளின்மேல் ஜெயம்

''**திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்**'' (யோவான் 10:10) என்று

வேதம் வெளிப்படுத்துகிறது. ஆனாலும் இயேசு, "**நான் அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அவை பரிபூரணப் படவும் வந்தேன்**" என்று கூறுகிறார். சாத்தான் நம்மைத் தாக்குவதற்கு பல்வேறு உபாய தந்திரங்களைப் பயன் படுத்தலாம். பாவம் செய்யும்படி நம்மைச் சோதிக்கலாம். நம்முடைய தீர்மானங்களைப் பலவீனமடையச் செய்யலாம். நம்முடைய வாழ்வில் விளங்கும் இயேசுவின் அன்பை மறுதலிக்கும்படி செய்ய முயற்சிக்கலாம். சில வேளைகளில் அவனுடைய உபாய தந்திரங்கள் மறைவானதாக, நம்முடைய இருதயத்தை உலகப்பிரகாரமான ஆசைக ளுக்கு நேராக இழுப்பதாக இருக்கலாம். அவனுடைய கடைசி இலக்கு நம்மை இயேசுவை விட்டு பிரித்து, நம்முடைய ஆத்துமாவை அழிப்பதாகும். ஆனால் இயேசு நமக்கு பரிபூரண ஜீவனை தருவதற்காக வந்தார். பிசாசு எந்த அளவுக்கு திருடவும் கொல்லவும் அழிக்கவும் முயற்சிக்கி றானோ, அந்த அளவுக்கு இயேசு நமக்குள் பரிபூரண ஜீவனை தருகிறார்.

ஜெயம் கொள்ளும்படி அவர் நம்மை பெலப்படுத்துகிறார். "**கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும் படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள் ளுங்கள்**" (எபேசியர் 6:10,11) என்று பவுல் உற்சாகப்படுத்து கிறான். அந்த சர்வாயுதவர்க்கம், சரீரப்பிரகாரமானது அல்ல, அது ஆவிக்குரிய சர்வாயுதவர்க்கமாக, இயேசுவின் அன்பினால் நாம் பெறும் பரிபூரண ஜீவனாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக நமக்கு இரட்சிப்பு கிடைக்கிறது.

அவருடைய வார்த்தையின் மூலமாக நமக்கு பரிபூரண ஜீவன் கிடைக்கிறது. கிறிஸ்துவின் இந்த பரிபூரண ஜீவன் உங்களுக்குள் ஒரு சர்வாயுதவர்க்கமாக எழும்பி, உங்க ளுக்கு விரோதமாக எறியப்படும் எல்லா அக்கினியாஸ்திரங் களிலிருந்தும், சத்துருவின் பொல்லாத யோசனைகளிலி ருந்தும் உங்களைக் காக்கிறது என்று வேதம் வாக்குப் பண்ணுகிறது (ரோமர் 16:20). சத்துருவினுடைய சகல சதி ஆலோசனைகளையும் ஆவிக்குரிய அதிகாரத்துடன் அடையாளம் காணும்படி தெய்வீக வெளிப்பாட்டை கொடுத்து உங்களைப் பழக்குவிக்கிறார். ஆகவேதான், பரிசுத்த ஆவியானவரின் வரம் உங்களுக்குள் வருகிறது. அது சத்துருவின் சகல அரணான கோட்டைகளையும் அழிக்கிறது (1 கொரிந்தியர் 12:8-10).

> **"தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்"** **(யாக்கோபு 4:7)**

தேவனுக்கு உங்களை ஒப்படைக்கும்போது, அவரு டைய சித்தம் உங்களுக்குள் நிரம்புகிறது. சத்துருவினுடைய சகல தாக்குதலையும் எதிர்க்கக்கூடிய அவருடைய பெலன் உங்களை நிரப்புகிறது. நாம் அவரது நாமத்தை தரித்துக் கொள்ளும்போது பிசாசுகளைத் துரத்துவோம் என்று இயேசு கூறியிருக்கிறார். அவரது நாமம் எல்லா நாமங்களுக்கும் மேலானது. அது ஜெயிப்பதற்கான ஒரு ஆயுதம் ஆகும். அது இருளை அகற்றும் வல்லமை கொண்டது. அவருடைய நாமத்தை உங்கள் இருதயத்தில் வைத்து, உங்கள் உதடுகளால் உச்சரியுங்கள். உங்கள் ஆவியில் இயேசுவின் நாமம் இருக்கட்டும். நீங்கள் இயேசுவுக்காக வாழுங்கள். இயேசுவின் சித்தத்தை நிறைவேற்றும்படியாக உங்கள் வாழ்க்கை அமைவதாக. அப்பொழுது நீங்கள் பொல்லாத ஆவிகளை விரட்டும் பலத்த வல்லமையைப் பெறுவீர்கள்.

சரிதா என்ற சகோதரி, 28 ஆண்டுகள் பிசாசின் வல்லமையோடு போராடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அனுதின வாழ்விலும் பல தடைகள் வந்துகொண்டே இருந்தன. அவர்கள் பல ஜெபக்கூட்டங்களுக்குச் சென்ற போதும் இந்தப் போராட்டங்களிலிருந்து விடுதலை கிடைக்கவில்லை. கண்டிப்பாக இதிலிருந்து விடுதலைப் பெறவேண்டும் என்பதற்காக அவர்கள் மிகுந்த ஆவலோடு நான் நடத்திய ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். ஜெபவேளையின்போது, தேவன் அவர்களைத் தொட்டு நீண்டகாலமாக இருந்த சாத்தானின் பிடியிருந்து அவர் களைப் பூரணமாக விடுவித்தார். அவர்கள் விடுவிக்கப்பட்டது மட்டுமல்ல; அவர்களுக்கு பற்பல பாஷைகளை பேசும் வரமும் கிடைத்தது. அது, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை வெளிப்படுத்தக்கூடிய ஒரு வரமாக அமைந்தது. அது அவர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்வு புதுப்பிக்கப் பட்டது. சரிதா, தன்னுடைய சவாலான எல்லா சூழ்நிலை களையும் தேவனுடைய வல்லமை எப்படி மாற்றியது, அதை எப்படி ஜெயமாகவும், நம்பிக்கைக்கு உரியதாகவும் மாற்றியது என்று அவர்கள் சாட்சி கூறினார்கள்.

உங்கள்மீது தாக்குதல்கள் தொடர்ந்தாலும் அவரை உயர்த்திக்கொண்டே இருங்கள்; தொடர்ந்து அன்புகாட்டுங் கள்; மன்னியுங்கள். மற்றவர்களுக்காக, உங்களை ஒடுக்கு கிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள். தேவனுக்குள் களிகூர்ந்து அவரைத் துதியுங்கள். அவருடைய வாக்குத் தத்தங்களை நம்புங்கள். அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியுங்கள். இக்கட்டான வேளைகளிலும் அன்பை நம்புங்கள்; விசுவாசம் கொள்ளுங்கள். இயேசுவையே நினைத்து அவருடைய சிலுவையின்மேல் நீங்கள் கண்ணோக்கமாக இருக்கும்போது, சத்துருவால் உங்கள் கவனத்தை திருப்ப முடியாது. பிசாசின் சோதனைகளில் உங்களை சிக்க வைக்க முடியாது. மாறாக, நீங்கள் எல்லா இக்கட்டுகளின்மேலாக உயர்ந்து, வாழ்வின் எப்பக்கமும் ஜெயம் பெறுவீர்கள்.


இயேசு அழைக்கிறார் தொலைபேசி ஜெப கோபுரம்
ஜெப உதவிக்கு (24 X 7)
8546 999 000 [அனைத்து மொழிகளிலும்]
மின்னஞ்சல்: paul@jesuscalls.org
தினமும் காலை 8 முதல் இரவு 8 மணிவரை ஜெப கோபுரத்திற்கு நேரில் வாருங்கள்

TRUE FRIEND™ MATRIMONY

@truefriendmatrimony
+91 75500 14747 / 54747 / 64747

# FIND TRUE LOVE WITH
## True Friend Matrimony



Exclusive Discount
**20% OFF**
on **Supreme Plan★**


*Join and Celebrate Love*
*with True Friend Matrimony!*
***offer valid from 14th April to 30th April***

www.truefriendmatrimony.com

TRUE FRIEND SHOPPE

@truefriendshoppe
+91 73387 93939

## True Friend Shoppe online




SEASON OF LENT
# SPECIAL BOOKS
SHOP NOW

Meditate and Reflect on
***Christ's Love***

SHOP NOW

www.truefriendshoppe.app

## திருநெல்வேலியில்

# இயேசு அழைக்கிறார் பிரார்த்தனை திருவிழா

## பாக்கியம் பெற பொன்னான தருணம்






**"ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்" மத்தேயு 24:14**

வரும் மே மாதம் திருநெல்வேலியில் நடைபெறஇருக்கும் இயேசு அழைக்கிறார் பிரார்த்தனை திருவிழாவுக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம். நெல்லை பிரார்த்தனை திருவிழாவை நடத்தும்படி ஆண்டவர் வாசல்களை திறந்திருக்கிறார். இக்கூட்டங்களில் தேவனுடைய பிரசன்னம் அசைவாடி சுகத்தையும் விடுதலையையும் நன்மையான மாற்றங்களையும் அளிக்கும். திருநெல்வேலி பட்டணத்திற்கு மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதற்குமே இக்கூட்டங்கள் ஆசீர்வாதமாக அமையும் என்று நம்புகிறோம். நாட்களை குறித்துக் கொள்ளுங்கள்.

### நெல்லை பிரார்த்தனை திருவிழா - 2025 மே 3, 4

இயேசு அழைக்கிறார் பிரார்த்தனை திருவிழாக்களில் பல்வேறு தேவைகளோடு வரும் மக்களுக்காக Dr.பால் தினகரன் குடும்பத்தினர் ஜெபிக்கிறார்கள். அவர்கள் ஊழியம் செய்யும்போது, தேவன் வல்லமையாக அசைவாடுகிறார்; ஜெபங்களுக்கு பதில் அளிக்கிறார்; அற்புத அடையாளங்கள் மூலமாகவும், அதிசயங்கள் மூலமாகவும் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணுகிறார். எல்லா பிரார்த்தனை திருவிழாக்களிலும் ஆண்டவரின் அன்பு வெளிப்படுகிறது; மக்கள் சுகம் பெறுகிறார்கள்; விடுதலையடைகிறார்கள்; வாழ்வில் நன்மையான மாற்றம் ஏற்படுகிறது.

### நம்பிக்கையின் திருவிழா

பிரார்த்தனை திருவிழாக்களில்,

- தெய்வீக வெளிப்பாட்டின்படி மக்கள் பெயர் சொல்லி அழைக்கப்படுகிறார்கள்
- பிசாசின் பிடியிலிருந்து, கட்டுகளிலிருந்து விடுதலை பெறுகிறார்கள்
- தேவனுடைய தொடுதலால் நோயிலிருந்து அற்புத சுகமடைகிறார்கள்
- தேவ சமாதானம் கணவன், மனைவியை, பிள்ளைகளை நிறைப்புவதால் குடும்பங்கள் மீண்டும் இணைகின்றன.
- கெட்ட பழக்கங்களிலிருந்து விடுபட்டு, சுவிசேஷத்தின் மூலம் இரட்சிக்கப்படுகின்றனர்
- பிரார்த்தனை திருவிழாக்களில் கிறிஸ்துவின் கிருபை வெளிப்படுகிறது; மக்கள் நம்பிக்கை பெறுகிறார்கள்; சீர்ப்படுகிறார்கள்; தேவனுடைய நாம மகிமைக்காக வல்லமையான சாட்சிகள் எழும்புகின்றன.

## பிரார்த்தனை திருவிழாவின் மூலம் வாழ்க்கை மாறிய ஒருவரின் சாட்சி:

நான் சிறுவயதில் ஒடிசா மாநிலத்திலுள்ள கந்தமால் என்ற ஊரில் வளர்ந்தேன். எங்கள் குடும்பத்தில் மூவர், பில்லிசூனிய தாக்குதலால் உயிரிழந்தனர். ஆகவே, என் சிறுபருவம் பயம் நிறைந்ததாக கழிந்தது. நானும் அதிகமாய் நோய்வாய்ப்பட்டேன். உயிர் தப்ப புவனேஸ்வரத்துக்கு ஓடிப்போனேன். அங்கே, கிறிஸ்துவை குறித்து அறிந்துகொண்டேன். எனக்கு நான்கு குழந்தைகள். குடும்பத்தை காப்பாற்றுவதற்காக ஒரு தொழிலை ஆரம்பித்தேன். இயேசு அழைக்கிறார் பத்திரிகையை வாசித்தபோது, ஆண்டவர் என்னை ஊழியம் செய்ய அழைப்பதாய் உணர்ந்தேன். சகோ.டி.ஜி.எஸ். தினகரனின் வழிகாட்டுதலையும் நாடினேன். எங்கள் பகுதியில் நடந்த கலவரத்தால் நாங்கள் வீட்டை இழந்தோம். மிகுந்த பணக்கஷ்டத்தின் மத்தியிலும் முழு நேர ஊழியத்தை செய்ய தொடங்கினேன். ராஞ்சியில் பிரார்த்தனை திருவிழா நடந்தபோது, Dr. பால் தினகரன், "இங்கே ஒருவர் இருக்கிறார். நீங்கள் எல்லாவற்றையும் இழந்துவிட்டீர்கள். ஆண்டவர் உங்களுக்கு ஒரு வீட்டை தருவார்; உங்கள் வாழ்க்கையை மறுபடியும் கட்டியெழுப்புவார்" என்று கூறினார். அற்புதவிதமாக, வீடு வாங்க தேவையான பணம் கிடைத்தது. ஆகவே, என்னுடைய கிராமத்திற்குச் சென்று ஒரு வீட்டை வாங்கினேன். புவனேஸ்வரத்தில் ஒரு சபையை ஆரம்பித்தேன். அது வளர்ந்து பெருகி வருகிறது. நாங்கள் குடும்பமாக ஊழியம் செய்கிறோம். அதன் மூலம் அநேகர் சுகமும் ஆசீர்வாதமும் பெறுகின்றனர்.

- உத்தம் குமார், புவனேஸ்வரம், ஒடிசா.










### இந்த வல்லமையான ஊழியத்தில் கரம் கோர்த்திடுங்கள்

நெல்லை பிரார்த்தனை திருவிழா மூலம் திருநெல்வேலியில் 7 லட்சம் மக்களை சந்திக்க இருக்கிறோம். மக்களை கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மூலம் சந்திப்பதற்கு இது நல்ல வாய்ப்பு. இதற்கு நீங்கள் உதவுவீர்களா?

### இந்த பிரமாண்டமான கூட்டங்களை நடத்துவதற்கும், கீழ்க்காணும் ஏற்பாடுகளை செய்வதற்கும் பொருளாதார தேவைகள் அதிகம்

- மேடை, ஒலி, ஒளி அமைப்பு
- உணவு, தங்கும் செலவு
- பந்தல், கூடாரம் மற்றும் இருக்கை வசதி அமைத்தல்
- ஊழியக்குழு உறுப்பினர்கள், தன்னார்வ ஊழியர்களின் பயண செலவு
- விளம்பரம், அபிவிருத்தி பணிகள்
- தொழில்நுட்ப சாதனங்கள், இணைய இணைப்பு
- நேரடி ஒளிபரப்பு மற்றும் இணைய ஒளிபரப்பு

இந்த தெய்வீக ஊழியம் நிறைவேறுவதற்கு ஜெபித்தும், உதாரத்துவமாக கொடுத்தும் தாங்கக்கூடிய உண்மையுள்ள விசுவாசிகள் தேவை.

---

இயேசு அழைக்கிறார் பிரார்த்தனை திருவிழா ஊழியத்திற்கு விசுவாசத்துடன் காணிக்கை கொடுத்து நீங்களும் இதில் பங்குபெறலாம்.

**தேவ ராஜ்ய பணியில் விதைத்து, மற்றவர்கள் இரட்சிப்பையும் சுகத்தையும் நல்ல மாற்றத்தையும் அடைய காரணமாக அமைவீர்களா?**

கீழ்க்காணும் தொகையினை விசுவாச காணிக்கையாக அளித்து பங்களிக்கலாம்

☐ ரூ. 3,00,000/- ☐ ரூ. 1,00,000/- ☐ ரூ.50,000/- ஆண்டவர் ஏவும் எந்த தொகையும்

**சுவிசேஷம் அறிவிக்கப்படுவதற்கென நீங்கள் விதைக்கும் காணிக்கை, வாழ்க்கையை மாற்ற உதவும்.**

தேவனுடைய அசைவாடுதலில் நீங்களும் பங்கு பெறுங்கள்.

www.jesuscalls.org என்ற இணையதளத்தின் மூலம் பாதுகாப்பான முறையில் நீங்கள் நன்கொடை அளிக்கலாம். அல்லது கொடுக்கப்பட்டுள்ள QR Codeஐ ஸ்கேன் செய்து அனுப்பலாம். நாம் இணைந்து இயேசுவை மகிமைப்படுத்துவோம்.

இந்த ஊழியத்தில் எங்களுடன் இணைந்து நிற்கும் உங்கள்மேலும் உங்கள் குடும்பத்தினர்மேலும் ஆண்டவர் தமது ஆசீர்வாதத்தை பன்மடங்காய் பொழிந்தருளுவாராக.

திருநெல்வேலி




# வெற்றியுள்ள குடும்பம்

அன்பானவர்களே,

உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் ஈஸ்டர் பண்டிகை ஆசீர்வாதமாக அமைய வாழ்த்துகிறேன். உங்கள் குடும்பம், வாழ்க்கையில் வெற்றியை அனுபவிக்க முடியாதபடி தடுக்கும் எல்லா கற்களும் இந்த ஈஸ்டர் பண்டிகையின்போது புரட்டித் தள்ளப்படும்படி ஜெபிக்கிறேன்.

கிறிஸ்துவுக்குள் வேரூன்றி இருக்கும் குடும்பம், சில உறுப்பினர்கள் கூடி வசிப்பதாக மட்டுமல்ல; தேவனுடைய ஜெயத்தின் சாட்சியாகவும் அது விளங்குகிறது. இயேசு, தம் மரணத்தின் மூலமும், உயிர்த்தெழுதலின் மூலமும் ஜெயம் பெற்று, விசுவாசிகளுக்கு, குடும்பங்களுக்கு வெற்றியை ஈட்டித் தந்துள்ளார். வெற்றியுள்ள குடும்பமானது, கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்த கிரியையைக் கொண்டு தேவனுடைய வாக்குத்தத்தங்களின்மேல் உறுதியாய் நிற்கிறது; விசுவாசத்திலும் அன்பிலும் நடக்கிறது; ஒற்றுமையாய் இருக்கிறது; உபத்திரவங்களை மேற்கொள்கிறது.



### இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும்: ஜெயத்தின் அடிப்படைகள்

ஒவ்வொரு விசுவாசியின் வெற்றிக்கும், இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணமும் உயிர்த்தெழுதலுமே முக்கியமானதாக விளங்குகிறது. "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" (யோவான் 16:33) என்று இயேசு உறுதியாய் கூறுகிறார். உபத்திரவங்கள் வரலாம்; ஆனால், கிறிஸ்து ஏற்கனவே ஜெயம்பெற்றுள்ளார் என்பதை குடும்பங்களுக்கு இந்த வாக்குத்தத்தம் நினைவுப்படுத்துகிறது.

சிலுவையானது, மீட்பின், சுகமாக்குதலின், சீர்ப்படுத்துதலின் அடையாளமாக விளங்குகிறது. இல்லற வாழ்க்கைக்கு கேடு விளைவிக்கும் பாவத்தை, மனமடிவை, பிரிவினையை, இயேசு தாம் செய்த தியாகத்தின் மூலம் ஜெயித்தார். மரணமும் பயமுமே இறுதியானவை அல்ல என்று இயேசுவின் உயிர்த்தெழுதல் உறுதி செய்துள்ளது. இந்த சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும் குடும்பமானது, கருத்துவேறுபாடுகள், பணக்கஷ்டம், உடல்நலக்கோளாறுகளை தாண்டி, ஒற்றுமைக்கு எதிராக வரும் புயல்களை தாண்டி மேலாக எழும்பும்.

### வேதாகமத்தில் காணப்படும் வெற்றியுள்ள குடும்பங்கள்

**நோவாவின் குடும்பம்** - பாவம் நிறைந்த சந்ததியில் வாழ நேரிட்டாலும் நோவாவும் அவனுடைய குடும்பத்தினரும் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருந்தனர் (ஆதியாகமம் 6 - 9 அதிகாரங்கள்) தங்களுடைய கீழ்ப்படிதலின் மூலம் அவர்கள் அழிவிலிருந்து இரட்சிக்கப்பட்டனர். சுற்றிலுமுள்ள உலகம் குழப்பமாக இருந்தாலும், நீதியில் ஸ்திரமாக இருக்கும் குடும்பமே வெற்றியுள்ள குடும்பமாகும்.

**கொர்நேலியுவின் வீட்டார்** - ரோம நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு, தேவ பக்தியுள்ளவனாயிருந்தான்; அவன் வீட்டார் அனைவரும் தேவனுக்கு பயந்திருந்தனர் (அப். 10ம் அதிகாரம்). அவனுடைய விசுவாசத்தின் மூலம், அவனும் அவன் குடும்பத்தினரும் சுவிசேஷத்தைப் பெற்றுக்கொண்டனர்; பரிசுத்த ஆவியி

EvangelinePaulDhinakaran | evangeline@jesuscalls.org

னால் நிரப்பப்பட்டனர். ஒன்றாய் இணைந்து தேவனை தேடும் குடும்பம் அவருடைய தெய்வீக மறுரூபமாக்குதலையும் ஆசீர்வாதங்களையும் அனுபவிக்கும் என்பதை இது காட்டுகிறது.

**பிலிப்பிய சிறைச்சாலைக்காரனின் குடும்பம்** – பவுலும் சீலாவும் சுவிசேஷத்தை அறிவித்து, ஜெபித்து, தேவனை ஆராதித்ததால் சிறைக்குள் போடப்பட்டனர் (அப்போஸ்தலர் 16ம் அதிகாரம்) ஆச்சரியவிதமாக பூமியதிர்ச்சி வந்து அவர்களை விடுவித்தது. சிறைச்சாலைக்காரன் உயிருக்குப் பயந்தவனாய், இரட்சிக்கப்படுவதற்கு தான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். பவுல், “கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்” (அப்போஸ்தலர் 16:31) என்று கூறினான். அன்று இரவே, சிறைச்சாலைக்காரனும் அவன் குடும்பத்தினரும் ஞானஸ்நானம் பெற்றனர்; இரட்சிப்பானது குடும்பம் முழுவதற்குமே சந்தோஷத்தையும் மறுரூபமாகுதலையும் அளிக்கும் என்பது விளங்கியது.

ஒரு குடும்பத்தினர் மிகுந்த பணக்கஷ்டத்தில் இருந்தனர். தகப்பன் வேலையை இழந்தார். அம்மா, நோயுற்றிருந்தார்கள். இதனால் உண்டான மன அழுத்தத்தினால் பிள்ளைகள் பள்ளியில் படிக்க முடியாமல் திணறினர். எல்லாமே முடிந்து போனது என்பதுபோன்ற நிலை ஏற்பட்டது. ஆனால், பயத்தில் மூழ்கி அவநம்பிக்கைக்கு உள்ளாவதற்கு பதிலாக, அவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தங்களை அறிக்கையிட்டு ஜெபிக்க ஆரம்பித்தனர். “என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்” (பிலிப்பியர் 4:19) என்ற வசனத்தை பற்றிக்கொண்டனர். இக்கட்டுகளின் மத்தியிலும் அவர்கள் தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தார்கள். புதிய வேலைவாய்ப்பு, எதிர்பாராத பணவரவு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் என்று அற்புதவிதமாக வாசல்கள் திறந்தன. குடும்பமானது விசுவாசத்தில் ஸ்திரமாக இருந்தால், தேவன், அவர்கள் உபத்திரவங்களை வெற்றியாக மாற்றுவார் என்பதை அவர்கள் சாட்சி விளக்கியது.

வெற்றியுள்ள குடும்பம் என்றால் போராட்டங்களே இல்லாத ஒன்றல்ல; அந்தப் போராட்டங்களை கிறிஸ்துவினால் ஜெயிப்பதே வெற்றியுள்ள குடும்பமாகும்

## வெற்றியுள்ள குடும்பத்தின் இயல்புகள்

**தேவனுடைய வாக்குத்தத்தங்கள்மேல் விசுவாசம்** – வெற்றியுள்ள குடும்பமானது தேவனுடைய வசனத்தை சார்ந்திருக்கும். “நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்” (யோசுவா 24:15) என்று வேதம் கூறுகிறது. அப்படிப்பட்ட குடும்பம், ஆராதனைக்கு, ஜெபத்திற்கு, தேவனுக்குக் கீழ்ப்படிவதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது.

**ஒருமனமும் அன்பும்** – “அன்பு சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்” (1 கொரிந்தியர் 13:7) என்று வேதம் நமக்குப் போதிக்கிறது. கருத்துவேறுபாடுகளை மேற்கொண்டு நிபந்தனைகள் விதிக்காமல் அன்புகூரும் குடும்பம், வாழ்வின் புயல்களின் மத்தியிலும் உறுதியாயிருக்கும்.

**உபத்திரவங்களின் மத்தியிலும் மனம் தளராதிருத்தல்** – “என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்” (யாக்கோபு 1:2,3) என்று வேதம் உற்சாகப்படுத்துகிறது. வெற்றியுள்ள குடும்பம், தேவன் எல்லாவற்றையும் தங்களுக்கு நன்மையாகவே செய்வார் என்பதை அறிந்து இக்கட்டுகளை சகித்துக்கொள்ளும் (ரோமர் 8:28).

**மன்னிப்பும் கிருபையும்** – கிறிஸ்து மன்னித்ததுபோல, வெற்றியுள்ள குடும்பம், கிருபையையும் ஒப்புரவாகுதலையும் நடைமுறையில் காண்பிக்கும். “ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்” (கொலோசெயர் 3:13) என்று வேதம் நமக்கு நினைவுப்படுத்துகிறது.

வெற்றியுள்ள குடும்பம் என்றால் போராட்டங்களே இல்லாத ஒன்றல்ல; அந்தப் போராட்டங்களை கிறிஸ்துவினால் ஜெயிப்பதே வெற்றியுள்ள குடும்பமாகும். குடும்ப வாழ்வின் வெற்றிக்கு, இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் வல்லமையே அடிப்படையாகும். தேவனை விசுவாசித்து, ஒற்றுமையாய் வாழ்ந்து, விசுவாசத்தில் தொடரும்போது, இயேசு வாக்குப்பண்ணிய பரிபூரண ஜீவனை குடும்பங்கள் அனுபவிக்க முடியும் (யோவான் 10:10). எல்லா வீட்டாரும் தாங்கள் கிறிஸ்துவின் மூலம் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம் என்பதை அறிந்து, சிலுவையின் வெற்றியை சுதந்தரித்து தேவனுடைய பரிபூரண ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள முடியும் (ரோமர் 8:37).

# கேள்வி பதில்

## Dr. பால் தினகரன் பதிலளிக்கிறார்...




**"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்" (எபிரெயர் 11:6)**

தேவனுக்குப் பிரியமாயிருப்பதற்கு விசுவாசம் அவசியம் என்று வேதம் நமக்குப் போதிக்கிறது. தேவன் இருக்கிறார் என்று நம்புவது மாத்திரமல்ல; அவர் தம்மை உண்மையாய் தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறார் என்பதையும் நம்புவதே விசுவாசமாகும். கிறிஸ்துவுடன் ஆழமான உறவு கொண்டு, முழுவதும் அவரையே சார்ந்திருந்து, அவருடைய வாக்குத்தத்தங்களின்மேல் உறுதியாக நிற்பதே விசுவாசத்தில் வர்த்திப்பதற்கான வழியாகும்.

### விசுவாசத்தை புரிந்துகொள்ளுதல்: கடுகுவிதை தத்துவம்

"எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும்" என்று சீஷர்கள் இயேசுவிடம் கேட்கிறார்கள். அவர், "**கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் இந்தக் காட்டத்திமரத்தை நோக்கி: நீ வேரோடே பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும்**" (லூக்கா 17:5,6) என்று கூறுகிறார். நம்முடைய விசுவாசத்தின் அளவு ஒரு பொருட்டல்ல; ஆனால், நாம் நம்பும் தேவனின் மகத்துவமே எல்லாவற்றுக்கும் காரணம் என்று இந்த ஆழமான போதனை நமக்கு உணர்த்துகிறது.

நாம் எந்த அளவுக்கு நம்புகிறோம் என்பதை அல்ல; யாரை நம்புகிறோம் என்பதை குறித்ததே விசுவாசமாகும். நாம் சூழ்நிலைகளைப் பார்க்காமல், கிறிஸ்துவின்மேல் நோக்கமாயிருந்தால் நம்முடைய விசுவாசம் பெருக ஆரம்பிக்கும். "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" (கொலோ. 1:27) என்று பவுல் எழுதுகிறான். கிறிஸ்து நமக்குள் பெருகும்போது நம்முடைய விசுவாசமும் பெருகுகிறது.

### உபத்திரவங்களின் மூலம் விசுவாசத்தில் வளருதல்

விசுவாசத்தில் வளருவதற்கு இக்கட்டான சூழ்நிலைகளே வாய்ப்புகளை அளிக்கின்றன. நம்முடைய பெலவீனமான தருணங்களிலே தேவனுடைய பெலன் வெளிப்படுகிறது. "**என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்**" (2 கொரிந்தியர் 12:9) என்று ஆண்டவர் பவுலிடம் கூறினார். நம்முடைய பெலனை, மனுஷீக புத்தியை, சுயத்தை சார்ந்திருப்பதை நாம் விட்டுவிடும்போது, நமக்குள் வல்லமையாக செயல்பட கிறிஸ்துவை அனுமதிக்கிறோம்.

நாம் இக்கட்டுகளை சந்திக்கும்போது, நம்முடைய சொந்த தகுதியை சார்ந்துகொள்ளாமல், தேவனுடைய வல்லமையை நோக்கவேண்டும். இக்கட்டான வேளைகளில் தேவனை நம்புவது, பொன் அக்கினியால் புடமிடப்படுவது போன்று நம்முடைய விசுவாசத்தை சுத்திகரிக்கும் (1 பேதுரு 1:7). செங்கடலை பிளந்த மோசே, கோலியாத்தை தோற்கடித்த தாவீது, சிங்கங்களின் கெபியில் காக்கப்பட்ட தானியேல் என்று வேதாகமத்தில் மனுஷர்கள் தேவன்மேல் முழு நம்பிக்கையும் வைத்தபோதே பெரிய அற்புதம் நடந்தது.

### விடுவோம்; பெறுவோம்

நாம் எவற்றுடன் பிணைக்கப்பட்டிருக்கிறோமோ அவற்றை அர்ப்பணித்துவிட்டு, முற்றிலும் தேவனை சார்ந்துகொள்ளும் போது விசுவாசம் வளருகிறது. "**என் நாமத்தினிமித்தம் வீட்டை யாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; ஆகிலும், முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள்**" (மத்தேயு 19:29,30) என்று இயேசு உறுதியாய் கூறுகிறார். மற்ற அனைத்து காரியங்களுக்கும் மேலாக தேவனுக்கு முதலிடம் கொடுக்கும்படி இந்த வாக்குத்தத்தம் அழைக்கிறது.

பலவேளைகளில் நாம் நம்முடைய செல்வம், அந்தஸ்து அல்லது நம்முடைய மனுஷீக தொடர்புகள் நம்மை பாதுகாக்கும் என்று அவற்றை சார்ந்துகொள்கிறோம். ஆனால், மெய்யான விசுவாசம் என்பது, உலகப்பிரகாரமான நம்பிக்கையை விட்டுவிட்டு தேவனுடைய உதவியின்மேல் நம்பிக்கையாய் இருப்பதையே குறிக்கும். நாம் அப்படிச் செய்யும்போது, அவர் நம்மை ஆவிக்குரியவிதமாக மட்டுமல்ல; வாழ்வில் எல்லாவிதங்களிலும் பூரணமாய் ஆசீர்வதிக்கிறார்.

# கிறிஸ்து நமக்குள் பெருகும்போது விசுவாசமும் பெருகுகிறது

**விசுவாசத்தை பெலப்படுத்த நடைமுறை வழிகள்**

விசுவாசமானது மந்தமானதல்ல; அது கிரியையினால் வளர்க்கப்படவேண்டும். நம்முடைய விசுவாசத்தை பெருகப்பண்ணுவதற்கான சில நடைமுறை வழிகள்:

**1. தினசரி வேதவாசிப்பு: "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்"** (ரோமர் 10:17)

நாம் எந்த அளவுக்கு அதிகமாக தேவனுடைய வார்த்தையுடன் நேரம் செலவழிக்கிறோமோ அந்த அளவுக்கு அதிகமாக நம்முடைய விசுவாசமும் பெலப்படும். வேதாகமத்தில் வாக்குத்தத்தங்கள் ஏராளமாய் உள்ளன. அவற்றை தியானிப்பது, தேவன்மீதுள்ள நம்முடைய நம்பிக்கையை வலுப்பெறச்செய்யும்.

**2. தேவனுடைய வசனத்தின்படி ஜெபித்தல்:** விசுவாசம் நிறைந்த ஜெபமானது வேத வசனங்களில் வேரூன்றியதாக காணப்படும். நாம் ஜெபிக்கும்போது, "ஆண்டவரே, உம்முடைய வார்த்தையில் நீர் இதை வாக்குப்பண்ணியிருக்கிறீர். அதை எனக்குச் செய்யும்" என்று அவருடைய வாக்குத்தத்தங்களின்மேல் நின்று கூறுகிறோம். "**நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது**" (யாக். 5:16) என்று வேதம் நமக்கு நினைவுப்படுத்துகிறது.

**3. தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடுத்தல்:** தேவன் பேசுவதை நாம் கேட்பதற்கு ஆர்வமாய் இருக்கும்போது விசுவாசம் வளருகிறது. ஜெபம், ஆராதித்தல், அமைதியான தியானம், பரிசுத்த ஆவியானவரை உணருதல் ஆகியவை மூலம் தேவன்மீதுள்ள நம்முடைய நம்பிக்கை பெலப்படுகிறது.

**4. விசுவாசத்தில் செயல்படுதல்:** விசுவாசத்திற்கு கிரியை அவசியமாயிருக்கிறது. "**அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்**" (யாக்கோபு 2:17) என்று வேதம் கூறுகிறது. தேவன் பேசும்போது, சூழ்நிலை நிச்சயமில்லாததாக காணப்பட்டாலும் நாம் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.

**5. விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும் சாட்சிகள்:** மற்றவர்களுடைய வாழ்வில் தேவன் எவ்வாறு செயல்பட்டார் என்பதை கேட்பதன் மூலம் நாம் ஊக்கம் பெறுகிறோம்; நம்முடைய விசுவாசம் கட்டியெழுப்பப்படுகிறது. வேதாகமத்திலுள்ள சாட்சிகள் நம்மை தூண்டுகிறதுபோல, இன்றைய நாட்களில் நடக்கும் அற்புதங்களும் தேவன் உண்மையுள்ளவராகவே இருக்கிறார் என்பதை நமக்கு உணர்த்துகின்றன.

விசுவாசம் என்பது எப்போதோ ஒருவேளை நிகழ்வதல்ல; அது அனுதினமும் ஆழமாக தேவன்மேல் நம்பிக்கை வைக்கும் தொடர் பயணமாகும். நமக்கு எந்த அளவுக்கு விசுவாசம் இருக்கிறது என்பதல்ல; நமக்குள் கிறிஸ்து எந்த அளவுக்கு பெருகுகிறார் என்பதைப் பொறுத்ததாக உள்ளது. நம்முடைய பெலனை, உலகப்பிரகாரமான சார்புகளை, பயங்களை அவரிடம் ஒப்படைக்கும்போது, நம்முடைய விசுவாசம் பெலப்படுகிறது; அற்புதங்கள் நடக்கத் தொடங்குகின்றன.

தேவனை தேடுவது, அவருடைய வார்த்தைகளில் நிற்பது, கீழ்ப்படிவது ஆகியவற்றின் மூலம் விசுவாசம் வளர்க்கப்படுகிறது. நாம் விசுவாசத்தில் வளரும்போது, தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை நம் வாழ்வில் செயல்படுவதை காண்போம். கிறிஸ்து நமக்குள் பெருகுவாராக; நம்முடைய விசுவாசம் வளர்ந்து புதிய உயரங்களை எட்டுவதாக; நாம் செய்கிற எல்லாவற்றிலும் தேவனுக்கு மகிமையை கொண்டு வருவோமாக.





## கோடிக்கணக்கான ஜனங்களின் கண்ணீர் துடைக்கப்படும்படி இயேசு அழைக்கிறார் ஊழியத்தைத் தாங்குவதற்கான வழிகள்

**வங்கி மூலம் :**

IndusInd Bank
Beneficiary Name: **JESUS CALLS**
Account No.: **555444333222111**
Bank: **IndusInd Bank, Rajaji Salai Branch, Chennai - 600001.** IFS Code: **INDB0000167**

ICICI Bank
Beneficiary Name: **JESUS CALLS**
Account No.: **000901056144**
Bank: **ICICI Bank Ltd., Nungambakkam Branch, Chennai 600 034.**
IFS Code: **ICIC0000009**

**BANK TRANSFER DETAILS CAN BE INTIMATED: partnercare@jesuscalls.org**

QR Code-ஐ ஸ்கேன் செய்து அனைத்து UPI செயலிகள் மூலமும் தாங்கலாம்.

Paytm G Pay BHIM PhonePe

**SCAN TO PAY**

UPI ID **jesuscalls@indus**

நீங்கள் வங்கி பரிமாற்றம் மற்றும் வங்கிகளின் செயலிகள் (Apps) மூலமாக நன்கொடை அனுப்பினால், தயவுசெய்து அதைக் குறித்த விவரங்களை உடனே **98409 99923** என்ற எண்ணுக்கு எஸ்எம்எஸ் அல்லது வாட்ஸ்அப் வாயிலாக எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கவும், உங்கள் நன்கொடை வந்து சேர்ந்ததற்கான ஒப்புதலை உங்களுக்கு தெரியப்படுத்தவும் அது உதவும்.


மணியார்டர் (EMO) மற்றும் 'JESUS CALLS' என்ற பெயரில் டிமாண்ட் டிராப்ட் / காசோலை (CTS) எடுத்து, ஜெப கோபுரம், 16, டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை - 600 028 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

உங்கள் பகுதியிலுள்ள ஜெப கோபுரத்திற்கு நேரில் சென்றும் தாங்கலாம்

"நன்மைசெய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்"
கலாத்தியர் 6:9

# அறிமுகம்
# இம்மானுவேல் டிஜிட்டம் திட்டம்

## டிஜிட்டல் ஊழியத்தின் புதிய யுகம்




ஆண்டவர், பல லட்சக்கணக்கான மக்களுக்கு தாம் அளிக்கும் அன்பையும், சுகத்தையும், ஆறுதலையும் கொண்டு செல்லும் தெய்வீக பணியை இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்குக் கொடுத்து ஆசீர்வதித்துள்ளார். அன்பு பங்காளர்களின் ஆதரவினால்தான் இங்கு பிரார்த்தனை ஏறெடுக்கப்படுகிறது; திடப்படுத்தும் வசனம் பகிர்ந்துகொள்ளப்படுகிறது; ஆத்துமாக்கள் தொடப்படுகின்றன. நம் ஊழியம் இன்னும் ஏராளமானோரை தொட்டு, நல்ல மாற்றத்தை உண்டாக்கும்படி தேவன் தந்துள்ள இம்மானுவேல் டிஜிட்டல் திட்டம் (EDP) என்ற புதிய ஊழிய முயற்சியில் நீங்களும் பங்கு வகிக்குமாறு அழைக்கிறோம்.

### இம்மானுவேல் டிஜிட்டல் திட்டம் என்றால் என்ன?

**இயேசு அழைக்கிறார் ஊழிய பங்காளர்களுக்கு உடனடி சேவை செய்யவும், எளிதாக ஜெப உதவி, போதனைகளை அளித்து ஊக்கப்படுத்தவும் ஏற்றவிதத்தில் சேவை செய்யும் மென்பொருள் (CRM), இணையதளம் மற்றும் மொபைல் செயலி ஆகியவற்றை மேம்படுத்துவதே இம்மானுவேல் டிஜிட்டல் திட்டமாகும்.**

### இம்மானுவேல் டிஜிட்டல் திட்டத்தின் முக்கியத்துவம்

பல லட்சக்கணக்கான மக்கள் நம்பிக்கையையும் சுகத்தையும் பெற்றுக்கொள்ள உதவும்படி, தேவன் இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்கு அழைப்பு கொடுத்திருக்கிறார். நம்முடைய ஊழியம் வளருவது போல, பங்காளர்களின் தேவைகளும் பெருகுகின்றன.

- மக்களின் ஜெப விண்ணப்பங்களுக்கு Dr. பால் தினகரன் குடும்பத்தினரிடமிருந்து விரைவான பதில்கள்
- ஒவ்வொருவரின் ஆவிக்குரிய தேவைக்கேற்ப தனிப்பட்ட செய்திகள், போதனைகள் மற்றும் பிரார்த்தனைகள்
- மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்போர், மனச்சோர்வால் அவதிப்படுவோர் மற்றும் நேரடி ஊழியம் தேவைப்படுவோர் போன்றோருக்கு விரைவாக ஜெப உதவி அளித்தல்
- தம்பதியர் முகாம், வணிகர் கூட்டம், சுகமளிக்கும் கூட்டம், அபிஷேக ஆராதனை உள்ளிட்ட பல்வேறு சிறப்புக் கூட்டங்களுக்கு எளிதாக பதிவு செய்தல், பங்கு பெறுதல்
- இந்த ஊழிய முயற்சியை தாங்குவதற்கு தசமபாகம் மற்றும் காணிக்கைகளை அனுப்பக்கூடிய எளிய வழிகள் போன்ற வசதிகளை அளித்து பங்காளர்கள் ஊழியத்துடனும், ஊழியர்கள் பங்காளர்களுடனும் எளிதாக தொடர்புகொள்ளும்படி இம்மானுவேல் டிஜிட்டல் திட்டம் உதவும்.

இதன் மூலம் ஊழியப் பங்காளர்கள், ஊழிய சேவைகளை எங்கிருந்தும் எந்த நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம். ஜெப கோபுரங்களை, ஸ்தானாபதிகளை எளிதாக தொடர்புகொள்ளலாம்; டிஜிட்டல் செய்திகளை பெற்றுக்கொள்ளலாம்.



### இந்த தெய்வீக பணியில் நீங்கள் எப்படி பங்கு பெறலாம்?

இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு ரூ.5 கோடி செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆவியானவர் வழிநடத்துகிறபடி, தேவனுடைய ராஜ்யத்தில் விதைக்கின்ற உங்களைப் போன்ற உண்மையுள்ள பங்காளர்கள் மூலம் தேவன் இதற்கு தேவையானவற்றை அளிப்பார் என்று விசுவாசிக்கிறோம்.

**கீழ்க்காணும் முறையில் நீங்கள் இந்த ஊழியப் பணிக்கு உதவலாம்**

- ரூ. 1,00,000/-
- ரூ. 50,000/-
- ரூ. 25,000/-
- ரூ. ............... (ஆண்டவரால் வழிநடத்தப்படுகிறபடி எந்த தொகையும்)

பெரிய தொகையோ, சிறிய தொகையோ நீங்கள் கொடுக்கும் எல்லா காணிக்கையும் தேவையின் மத்தியில் வாழும் கோடிக்கணக்கான ஆத்துமாக்களுக்கு தேவ அன்பையும் ஆறுதலையும் கொண்டுசெல்ல உதவும். (காணிக்கை அனுப்பும்போது 'இம்மானுவேல் டிஜிட்டல் திட்டம்' என்று குறிப்பிட மறவாதிருங்கள்).

**கீழ்க்காணும் ஏதேனும் ஒரு வழியில் காணிக்கை கொடுக்கலாம்**

- **முகவரி:** ஜெப கோபுரம், 16, டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை 600 028.
- **இணையதளம்:** www.jesuscalls.org
- **ஜெப கோபுரம்:** உங்கள் பகுதியில் அமைந்துள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்திற்கு சென்று கொடுக்கலாம்.
- **பங்காளர் சேவை:** தொலைபேசி எண் 044 - 23456677 (காலை 8 முதல் இரவு 8 மணி வரை - இந்திய நேரம்).

காணிக்கைகளை எளிதாக அனுப்பக்கூடிய வழிகளை இந்த இதழின் 15ம் பக்கத்தில் காணலாம் (QR Codeஐ ஸ்கேன் செய்தும் இப்போதே நன்கொடை வழங்கலாம்).

### இம்மானுவேல் டிஜிட்டல் திட்டம் மக்களுக்கு எப்படி சிறந்தவகையில் சேவை செய்யும்

இம்மானுவேல் டிஜிட்டல் திட்டம், தொழில்நுட்பம் மட்டுமல்ல; மக்களை சந்திக்கவும் தேவனுடைய அழைப்பை சிறப்பாக நிறைவேற்ற உதவும் செயல்பாடும் ஆகும்.

**உடனடி ஜெப உதவி:** நெருக்கடியான சூழ்நிலையில் இருப்போர் அப்போதே ஆறுதலையும் தைரியத்தையும் பெற்றுக்கொள்ளும்படி அவசர ஜெப விண்ணப்பங்களுக்கு உடனடி பதில்

**டிஜிட்டல் சீஷத்துவம்:** பங்காளர்கள் தங்கள் தேவைக்குப் பொருத்தமான செய்திகள், போதனைகள் மற்றும் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும் சாட்சிகளை பெற்றுக்கொள்ளலாம்

**பதிவு செய்யவும் காணிக்கை வழங்கவும் எளிய வழி:** பங்காளர்கள் ஊழியத்திற்கு பாதுகாப்பான முறையில் காணிக்கை வழங்கவும், கூட்டங்களில் கலந்துகொள்ளவும், ஊழிய சேவைகளை பெறவும் வசதி

**அநேகரை சந்தித்தல்:** சமூக ஊடகம், மொபைல் தளங்கள் மற்றும் பிரார்த்தனை கூட்டமைப்பு மூலம் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அநேகருக்கு அறிவித்தல்

**சிறப்பான செயல்பாடு:** எல்லா ஊழிய சேவைகளையும் ஜெபத்துடனும், பங்காளர்களின் தேவைகளை உரியவிதத்தில் சந்திக்கும்வண்ணமும் அளிப்பதற்கு இது உதவும்.

நாம் இணைந்து தேவனுடைய அன்பை, ஆறுதலை, நம்பிக்கையை இந்தியா மற்றும் உலகின் எல்லா மூலைகளுக்கும் பரப்புவோம். இந்த முயற்சியில் எங்களுடன் துணை நிற்கும் உங்களை தேவன் அபரிமிதமாக ஆசீர்வதிப்பாராக.

"சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்" (2 கொரிந்தியர் 9:6) என்று வேதம் நிச்சயமாய் கூறுகிறது. நீங்கள் இந்த தெய்வீக பணிக்குக் கொடுக்கும்போது, பல லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையை தொடுகிற, குணமாக்குகிற, மறுரூபப்படுத்துகிற தேவனுடைய வேலைக்கென்று நல்ல நிலத்தில் விதைக்கிறீர்கள். உங்கள் உண்மையுள்ள இருதயத்தை காண்கிற ஆண்டவர், பிரதிபலனாக உங்களை பரிபூரணமாய் ஆசீர்வதிப்பார்.

நீங்கள் விதைக்கிறவற்றுக்கு ஆண்டவர் உரிய பலனை அளிப்பார்.

இவ்வுலகில் அவர் தம்முடைய ஐசுவரியத்தால் உங்களை ஆசீர்வதிப்பார்; அவரது நாமத்தில் கொடுக்கப்படும் ஒவ்வொரு வெகுமதிக்கும் உங்கள் பரலோக கணக்கில் ஆத்துமாக்களை சேர்ப்பார்.

நாம் ஒருமனமாய் ஜெபத்தில் இணைந்து, இம்மானுவேல் டிஜிட்டல் திட்டம் நிறைவேறும்படி செயல்படுவோம்.

இன்றே ஊழியத்தில் பங்காளராக இணைந்திடுங்கள்; இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் மூலம் தேவன் செய்கிற கிரியைகளில் பங்கடையுங்கள்.




# உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேசுகிறேன்...

ஊழியத்தில் என் உடன் பங்காளரே,

உயிர்த்தெழுந்த இரட்சகரான இயேசு கிறிஸ்துவின் வல்லமையினால் மேலான ஒரு வாழ்க்கையை நடத்த நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ''கர்த்தரிடத்தில் மன மகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்'' (சங்கீதம் 37:4) என்று வேதம் கூறுகிறது. நீங்கள் ஆண்டவருக்குள்ளும், அவருடைய ராஜ்யத்தின்பேரிலும் மகிழும்போது, நீங்கள் நினைப்பதைக் காட்டிலும் அவருடைய ஆசீர்வாதங்கள் பெரிதானவையாயிருக்கும். நடக்க முடியாது என்று காணப்படும் பெரிய தரிசனம் உங்களுக்கு இருக்கிறதா? மனந்தளராதிருங்கள். நீங்கள் தேவனுக்கு முதலிடம் கொடுக்கும்போது, நீங்கள் எண்ணிப்பார்த்திராத வழிகளில் அவர் செயல்படுவார். இந்த ஈஸ்டர் பண்டிகை காலத்தில், அவர்தாமே நிலைவரமான சந்தோஷத்தால் உங்களை நிரப்புவாராக. நம்பிக்கையற்றதாய் காணப்படும் எல்லா சூழ்நிலைக்குள்ளும் உயிர்த்தெழுதலின் வல்லமையின் மூலம் அவர் தம்முடைய ஜீவனை ஊதுவாராக. அவருடைய வல்லமையான கரம் இரட்சித்திடாதபடி தடுக்கக்கூடிய பெரிய தடை ஏதுமில்லை. ஏற்கனவே இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் மூலம் நீங்கள் நித்தியமான மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறீர்கள். நீங்கள் ஏறெடுக்கும் ஒவ்வொரு ஜெபமும், உங்கள் காணிக்கையும் கிறிஸ்துவின் அன்பை கோடிக்கணக்கானோருக்கு கொண்டுசெல்ல உதவுகின்றன.

## ஆண்டவரின் வல்லமையான கிரியைகளின் சுருக்கமான அறிக்கை

ஆண்டவருடைய வழிநடத்துதலின்படி சமீபத்தில் சகோ.டி.ஜி.எஸ். தினகரன் நினைவு ஜெப கோபுரத்தில் முழு இரவு அற்புத ஜெபத்தை நடத்தினோம். மக்கள் விடுதலையையும் செழிப்பையும் அடையும்படி இந்த ஜெபம் நடத்தப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் கூடி வந்து, தங்கள் வாழ்வில் மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையோடு, விசுவாசத்தோடு ஜெபித்தார்கள். இதில் குடும்பமாக ஊழியம் செய்யும் சிலாக்கியம் எங்களுக்குக் கிடைத்தது; தேவ பிரசன்னம் நிறைவாய் விளங்கியது.

தேவனின் அசைவாடுதல் அத்துடன் நின்றுவிடவில்லை. இந்தியா முழுவதும் உள்ள 106 ஜெப கோபுரங்களிலும் ஒரே நேரத்தில் முழு இரவு ஜெபம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கானோர் ஒருமித்து ஊக்கமாய் ஜெபித்தனர். ஏராளமானோர் தேவனுடைய அற்புத விடுதலையையும் சீர்ப்படுத்துதலையும் அனுபவித்தனர். வல்லமையாய் அசைவாடிய தேவ மகிமையால் சங்கிலிகள் உடைந்தன; பாரங்கள் அகன்றன; மக்கள் வாழ்வில் மறுரூபமடைந்தனர்.

மார்ச் 8-ம் தேதி, சென்னையிலுள்ள புதுவாழ்வு ஏ.ஜி. சபையில் முழு இரவு ஜெபத்தில் ஊழியம் செய்யும் சிலாக்கியம் கிடைத்தது. அங்கும் மக்கள் மத்தியில் பரிசுத்த ஆவியானவர் வல்லமையாய் அசைவாடினார்; தேவ பிரசன்னம் மகிமையாய் விளங்கியது.

பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு இந்தக் கூட்டங்கள் ஆசீர்வாதமாக விளங்கும்படி செய்த தேவனுக்கே சகல மகிமையையும் செலுத்துகிறோம். அவர் ஜெபங்களுக்கு செவிகொடுக்கிறார்; தமது வல்லமையை விளங்கப்பண்ணுகிறார்; அவரை தேடுகிறவர்கள்மேல் தம் கிருபையை ஊற்றுகிறார்.

## 45 ஆண்டுகளாக பல லட்சம் பேரை தொடும் தொலைக்காட்சி ஊழியம்

இயேசு அழைக்கிறார் தொலைக்காட்சி ஊழியத்தின் வாயிலாக 45 ஆண்டுகள் இந்தியா முழுவதும் நற்செய்தியை அறிவித்து வருகிறோம். மாதந்தோறும் எல்லா பிராந்திய மொழிகளிலும், தூர இடங்களை அடையும்படியும் நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகிறோம். நம்முடைய தொலைக்காட்சி ஊழியத்தை உண்மையாய் தாங்கி வரும் பங்காளர்களின் ஆதரவினால் மாத்திரமே இந்த ஊழியத்தை செய்ய ஏதுவாகிறது. மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் இந்த ஊழியத்தில் நீங்களும் பங்குபெற விரும்பினால், ஒரு நிகழ்ச்சியை தாங்கி, கிறிஸ்துவின் செய்தியை பரப்புவதற்கு உதவும்படி அழைக்கிறேன். www.jesuscalls.org என்ற இணையதளத்தில் நீங்கள் விவரங்களை காணலாம்.

## சிறுபிள்ளைகளின் வாழ்வை மாற்றும் டைனமிக் சிறுவர் முகாம்

கோடை விடுமுறை வருகிறபடியினால், எல்லா ஜெப கோபுரங்களிலும் 4 முதல் 12 வயது வரையிலான சிறு பிள்ளைகளுக்கு ஆறு நாள் முகாமை நடத்த திட்டமிட்டுள்ளோம். பாடல்கள், வேதாகம பாடங்கள், கதைகள், கலைநயம் கொண்ட செயல்பாடுகள், வேடிக்கை நிகழ்ச்சிகள், மனப்பாட வசனங்கள், வேதாகம கேள்வி பதில் மற்றும் ஜெபம் ஆகியவை இந்த முகாமில் இடம் பெறும். கடந்த ஆண்டு 104 ஜெப கோபுரங்களில் தமிழ், ஆங்கிலம், ஹிந்தி மற்றும் தெலுங்கு மொழிகளில் நடைபெற்ற இம்முகாமில் 11,260 சிறுபிள்ளைகள் பங்கேற்றனர். இந்த ஆண்டு 'கனத்துக்குரிய பாத்திரம்' (2 தீமோத்தேயு 2:21) என்ற செம்பொருளில் நடைபெறும் சிறுவர் முகாமில் 20,000 பிள்ளைகள் இதில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

இம்முகாமுக்கு அனுமதி இலவசம்! தேவ ராஜ்யத்திற்கான கனத்துக்குரிய பாத்திரங்களாக மாறும்படி இம்முகாமில் கலந்துகொள்ள உங்கள் பிள்ளைகளை உற்சாகப்படுத்துங்கள். இதில் ஒரு சிறுபிள்ளைக்கு ஆகும் செலவை நீங்கள் தாங்கலாம் அல்லது முகாமுக்காக நன்கொடை வழங்கலாம். நன்கொடை வழங்குவதற்கான வழிமுறைகளை 15-ம் பக்கத்தில் காணலாம்.

## இம்மானுவேல் டிஜிட்டல் திட்டம் - டிஜிட்டல் ஊழியத்தில் புதிய யுகம்

இயேசு அழைக்கிறார் ஊழியத்துடன் நீங்கள் எளிதாக தொடர்புகொள்ளும் வகையில் இம்மானுவேல் டிஜிட்டல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஊழியத்தின் அத்தனை செயல்பாடுகளையும் நீங்கள் அறிந்துகொள்ளும்படியும், பல லட்சம் பேருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும்படியும் இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்கான மென்பொருள் (ERP), இணையதளம், மொபைல் செயலி ஆகியவை இத்திட்டத்தின் மூலம் மேம்படுத்தப்படுகின்றன.

நம்முடைய ஊழிய பங்காளர்களின் தொடர் ஆதரவினால் இயேசு அழைக்கிறார் மொபைல் செயலி நிறைவடையும் கட்டத்தை எட்டியுள்ளது. இயேசு அழைக்கிறார் இணையதளம், தடையின்றி எளிதாக பயன்படுத்தும் வகையில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. எந்த நேரமும் எந்த இடத்திலிருந்தும் ஊழிய சேவைகளை நீங்கள் எளிதாக பயன்படுத்தும்வண்ணம் இயேசு அழைக்கிறார் ERP மென்பொருள் விரைவாக வடிவமைக்கப்பட்டு வருகிறது.

இந்த தரிசனத்தை முழுமையாக நிறைவேற்றி முடிக்க ரூ.5 கோடி செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இது பெரிய தேவையாயினும் இந்த தெய்வீக பணியை தாங்குவதற்கு தேவன் ஏற்ற மக்களை எழுப்புவார் என்று விசுவாசிக்கிறோம். இந்த இதழின் 16ம் பக்கத்தில் இதைக் குறித்து மேலும் தகவலை அறியலாம்; இந்தத் திட்டத்திற்கு நன்கொடை செலுத்தும் வழிகளை காணலாம்.

## நடைபெற இருக்கும் கூட்டங்கள்

ஏப்ரல் 13 - குருத்தோலை ஞாயிறு - சகோ.டி.ஜி.எஸ். தினகரன் நினைவு ஜெப கோபுரம், சென்னை

ஏப்ரல் 18 - பெரிய வெள்ளி சிறப்பு கூட்டம் - சகோ.டி.ஜி.எஸ். தினகரன் நினைவு ஜெப கோபுரம், சென்னை

மே 3,4 - நெல்லை பிரார்த்தனை திருவிழா, திருநெல்வேலி

இக்கூட்டங்களின் மூலம் இப்பகுதியை சுற்றி வாழும் லட்சக்கணக்கான மக்கள், தங்கள் வாழ்க்கையை மாற்றக்கூடிய தேவ செய்தியைக் கேட்டு ஆசீர்வாதம் பெற, இவை சிறப்பாக நடைபெறும்படி ஊக்கமாக ஜெபித்துக் கொள்ளுங்கள். இக்கூட்டங்களில் தேவன் எங்களை வல்லமையாக பயன்படுத்தவும், பங்குபெறும் ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் தம்முடைய மகிமையை வெளிப்படுத்தவும் ஜெபியுங்கள்.

## பிரார்த்தனை திருவிழா ஊழியத்தை தாங்க விரும்புகிறீர்களா?

தேவ மகிமையை பல லட்சம் மக்கள் அனுபவிக்கும்படி கூட்டங்களை ஏற்பாடு செய்வதற்கு உங்கள் நன்கொடைகள் உதவும். Support Prayer Festivals என்ற இணைப்பின் மூலம் நன்கொடை வழங்கலாம்.

## மாவட்டம்தோறும் 1,000 ஜெப வீரர்கள்

நாடு முழுவதும் எல்லா மாவட்டங்களிலும் 1,000 ஜெப வீரர்களை எழுப்பும்படியான பாரத்தை ஆண்டவர் எங்கள் இருதயத்தில் வைத்துள்ளார். பட்டணங்களுக்கு, நகரங்களுக்கு, கிராமங்களுக்கு தேவ வல்லமையை கொண்டுசெல்லும் ஆவிக்குரிய கலங்கரை விளக்கங்களாக இந்த ஜெப வீரர்கள் வெளிச்சம் கொடுப்பார்கள். ஜெபிக்கும் தாகம் உங்கள் உள்ளத்தில் இருக்கிறதா? மற்றவர்களுக்காக திறப்பில் நிற்க விரும்புகிறீர்களா? volunteer@jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தொடர்பு கொண்டு இந்த ஊழியத்தில் இணைந்துகொள்ளுங்கள்.

## உங்களோடு இணைந்து மகத்தான காரியங்களை செய்ய விரும்புகிறோம்

அன்பு பங்காளரே, நீங்கள் ஆவிக்குரிய போஜனம் பெற்று, உபத்திரவ காலத்தில் உறுதியாயிருந்து, தேவ ராஜ்யத்திற்கென்று பூரணமான கனிகளைக் கொடுக்கும் செழிப்பான மரமாக விளங்குகிறீர்கள் (சங்கீதம் 1:3). நீங்கள் ஆண்டவர்மீது கொண்டிருக்கும் அன்பை, உங்கள் ஜெபமும் உதாரத்துவமாக செலுத்தும் காணிக்கைகளும் விளங்கப்பண்ணுகின்றன. கீழ்ப்படிதலுடன் நடக்கும் உங்கள் இருதயத்தின் விருப்பங்கள் அனைத்தையும் அவர் நிறைவேற்றுவார்.

இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்கு நீங்கள் ஆசீர்வாதமாக விளங்குவதற்காக உங்களுக்கு நன்றி கூறுகிறேன். நாம் இணைந்து இன்னும் பல லட்சம் மக்களின் வாழ்வில் நன்மையான மாற்றங்களை ஏற்படுத்துவோம்; நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கை அளிப்போம்; தேவ ராஜ்யத்தை விரிவாக்குவோம்.

உங்களுக்கும் உங்களுக்கு அன்பானோருக்கும் இந்த ஈஸ்டர் பண்டிகை மகிழ்ச்சியானதாகவும் ஆசீர்வாதமானதாகவும் அமைய வாழ்த்துகிறேன்.

உங்களுக்காக ஜெபிக்கும் அன்பு சகோதரன்,

Dr. பால் தினகரன்.



# இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்கள்
# நம்பிக்கை அளிக்கும் ஸ்தலங்கள்

**ராஞ்சி பட்டணத்திற்கு இயேசு தேவை**

## இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம் ராஞ்சி

இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்கள், ஜெபத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையில் புது நம்பிக்கையை விளங்கப்பண்ணும் ஸ்தலங்களாக விளங்கி வருகின்றன. ஜெப கோபுரங்களில் தினமும் நடக்கும் வல்லமை யான அற்புதங்களைக் கண்டு கர்த்தருக்குள் களிகூருகிறோம்.






ராஞ்சி

ஜார்க்கண்ட் மாநிலத்தின் தலைநகர் ராஞ்சி. இங்கு ஏறக்குறைய 16 லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். இந்த மக்களுக்கு ஆன்மீக ரீதியான, உணர்வு ரீதியான பல போராட்டங்கள் காணப்படுகின்றன. ராஞ்சியிலிருந்து அநேகர்,

- திருமண வாழ்வின் ஆசீர்வாதத்திற்காக, கணவன் / மனைவியின் மன மாற்றத்திற்காக
- வேலை வாய்ப்புக்காக
- அசுத்த ஆவிகள் மற்றும் அடிமைத்தன பழக்கங்களிலிருந்து விடுதலையும் சுகமும் பெறுவதற்காக
- 34, 35 வயதாகியும் ஏற்ற வாழ்க்கைத் துணை அமையாமல் அநேகர் கஷ்டப்படும் நிலையில், பொருத்தமான வாழ்க்கைத் துணைக்காக

ஜெபிக்கும்படி இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்கு ஜெப விண்ணப்பம் அனுப்புகின்றனர்.

ராஞ்சியிலுள்ள மக்களுக்காக ஊக்கமாக ஜெபிக்கவேண்டிய இந்நிலையில் ராஞ்சி ஜெப கோபுரம், இப்பட்டணத்தின் மக்களுக்கு நம்பிக்கையையும் சுகத்தையும் வாழ்வில் நல்ல மாற்றத்தையும் அளிக்கும் இடமாக விளங்குகிறது.






## ராஞ்சியின் தேவன் செய்த அதிசய கிரியைக் குறித்த சாட்சி
## சினைப் பை கட்டி குணமானது

2017ம் ஆண்டிலிருந்து என் சினைப் பையில் ஒரு கட்டி இருந்து வந்தது. அதனால் என் உடல்நலம் அதிக பாதிப்புக் குள்ளானது. அதற்கு சிகிச்சை பெறுவதற்காக என் தந்தை என்னை ராஞ்சியிலிருந்து ரூர்கேலாவுக்கு அழைத்துச் செல்வார். ஆனாலும் சிகிச்சை பலன் அளிக்கவில்லை. உடலில் ஹார்மோன்கள் சரியாகவில்லையென்றால் இந்தக் கட்டி சினைப் பை புற்றுநோயாக மாறக்கூடிய அபாயம் இருப்பதாக மருத்துவர்கள் எச்சரித்தனர். 2023 பிப்ரவரி மாதம், ராஞ்சி இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டேன். அங்கு தேவ ஊழியர் எனக்காக ஜெபித்தார். ஆண்டவர் என்னை அற்புதவிதமாக குணமாக்கினார். அன்றிலிருந்து நான் பூரண சுகமாக இருக்கிறேன். தேவன் பாராட்டிய இரக்கத்திற்காகவும் அவருடைய சுகமளிக்கும் வல்லமைக்காகவும் அவரை துதிக்கிறேன்.

– கிரண் கேர்கேட்டா, ராஞ்சி.





### ஊழியத்தின் விரிவாக்கம்

**தற்போது ராஞ்சியில் ஜெப இயக்கம் வளர்ந்து வருகிறது. நாம்**

- இந்தப் பட்டணத்தில் 1000 ஜெப வீரர்களை எழுப்ப வேண்டும்
- ராஞ்சியின் 24 மாவட்டங்களிலும் நற்செய்தியை பரப்பும்படி ஸ்தானாபதிகள், வாலிபர் ஊழிய பொறுப் பாளர்கள் மற்றும் நற்செய்தியாளர்களை எழுப்ப வேண்டும்.
- பங்காளர்கள், மற்றவர்களுக்காக ஜெபிக்கிறவர் களாக மாறும்படி பயிற்சி அளிக்கவேண்டும்.

### ராஞ்சி ஜெப கோபுர விரிவாக்கமும் புதுப்பிக்கும் பணியும்

தற்போது ராஞ்சி ஜெப கோபுரம், வணிக பயன்பாட்டு கட்டடத்தில் இயங்கி வருகிறது. ஊழியத்தை விரிவாக்கவும், ஜனங்களுக்கு இன்னும் நன்றாக சேவை செய்யவும் கீழ்க்காணும் புதுப்பிக்கும் பணிகள் அவசியமாயிருக்கின்றன.

- வார நாட்களிலும் அலுவலக நேரங்களிலும் தொந்தரவு இல்லாமல் கூட்டங்களை நடத்துவதற்கு ஒலி தடுப்பு அமைப்பு கொண்ட அரங்கம்
- தியான அறை புதுப்பித்தல் - மக்கள் தனியாக, மன்றாடி ஜெபிக்க அமைதியான சூழலை உருவாக்குதல்
- அதிகரித்து வரும் தொலைபேசி அழைப்புகளை நிர்வகிக்க அதிக எண்ணிக்கையில் கருவிகளை பொருத்தி, தொலைபேசி ஜெப கோபுரத்தை மேம்படுத்துதல்
- பராமரிப்பு, உள்கட்டமைப்பு உள்ளிட்டவிதங்களில் ஜெப கோபுரத்தை புதுப்பித்தல்

### இந்த ஊழியத்தில் பங்கு பெறுங்கள்

ஜெபிப்பதிலும், ஊழியம் செய்வதிலும் எங்களோடு இணைந்துகொள்ளும்படி உங்களை அன்புடன் அழைக்கிறோம். ராஞ்சி ஜெப கோபுரத்தில் நீங்கள் தன்னார்வ ஊழியம் செய்ய விரும்பினால் உங்களைப் பற்றிய முழு விவரங்களையும் volunteer@jesuscalls.org என்ற இமெயில் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் அல்லது 9709684500 என்ற எண்ணில் காலை 8 முதல் இரவு 8 மணி வரை ஜெப கோபுர மேலாளரை தொடர்புகொள்ளுங்கள்.

---

### ஊழியத்தைத் தாங்குங்கள் – நீங்கள் ஜெபத்தினாலும் பொருளாதார உதவியினாலும்

- ராஞ்சி ஜெப கோபுரம் புதுப்பித்தல் மற்றும் விரிவாக்க பணிக்கு
- ஜெப வீரர்களை எழுப்புவதற்கு
- ஊழிய சேவைகளை விரிவாக்குவதற்கு உங்கள் பங்களிப்பை வழங்கலாம்

**இந்தப் பணிக்கு கணக்கிடப்பட்டுள்ள தொகை: ரூ. 60 முதல் ரூ.70 லட்சம்**

நீங்கள் உதாரத்துவமாக அளிக்கும் காணிக்கை, கணக்கற்ற மக்கள் தங்கள் வாழ்வில் தேவனுடைய அற்புத வல்லமையை அனுபவிக்க உதவும்.

நீங்கள் ☐ ரூ.3 லட்சம், ☐ ரூ.1 லட்சம், ☐ ரூ.50,000, ☐ ரூ.10,000

அல்லது ஆண்டவர் உங்களை வழிநடத்துகிறபடி எவ்வளவு தொகையையும் நன்கொடையாக அளித்து தேவனுடைய பணியைத் தாங்கலாம்.

www.jesuscalls.org என்ற இணையதளத்தின் மூலம் அல்லது QR codeஐ ஸ்கேன் செய்து நன்கொடை வழங்கலாம்

இந்த ஊழியத்தில் பங்கு பெறும் உங்களை ஆண்டவர்தாமே பூரணமாய் ஆசீர்வதிப்பாராக.

# முற்றும் ஜெயம் கொள்ளுகிறவர்கள்

– சாமுவேல் தினகரன்

அன்பானவர்களே, இந்த ஈஸ்டர் பண்டிகை காலத்தில், உங்கள் வாழ்க்கை வெற்றி நிறைந்ததாக இருக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன். சவால்கள். போராட்டங்கள், நிச்சயமில்லாத சூழல்கள் நிறைந்த இந்த உலகில் சில நேரங்களில் நாம் மிகவும் பெரிய போராட்டத்தை எதிர்கொள்வதுபோல் உணருகிறோம்.

நட்பு, குடும்பம் மற்றும் சமுதாய ரீதியாக பல்வேறு அழுத்தங்களும் உண்டாகின்றன. கலக்கம், தன்னை பற்றிய தாழ்வு மனப்பான்மை, பயம் ஆகியவை அடிக்கடி நம் இருதயத்தைப் பிடித்து, வாழ்வின் இந்த இக்கட்டுகளை மேற்கொள்ளும் அளவுக்கு நமக்கு பெலனிருக்கிறதா? என்று திகைக்க வைக்கிறது. ஆனால், நாம் இந்த யுத்தத்தை தனியே பண்ண வேண்டுவதில்லை என்பதே உண்மையான சத்தியமாயிருக்கிறது.

### இயேசு பெற்ற வெற்றியின் வல்லமை

இயேசு சிலுவையில் மரித்து மறுபடியும் எழுந்தபோது, அவர் பாவம், மரணம், இருளின் சகல அதிகாரங்கள் எல்லாவற்றையும் தோற்கடித்தார். அவரது தியாகம், வரலாற்று சம்பவமாக மட்டுமல்லாமல் அவரை விசுவாசிக்கிற யாவருக்கும் வெற்றியின் அறிக்கையாகவும் விளங்குகிறது (ரோமர் 8:37). மட்டுமல்ல, இயேசுவின் பெலத்தின் மூலம் ஜெயத்தை நோக்கி முன்னேறுகிறவராக இருக்கிறார்கள் என்பதும் அர்த்தமாய் இருக்கிறது.

### இயேசுவின் வெற்றியின் மூலம் நீங்கள் வாழ்வில் கீழ்க்காணும் வழிகளில் வெற்றிபெறலாம்.

### பயத்தையும் கலக்கத்தையும் மேற்கொள்ளுதல்

எதிர்காலத்தைக் குறித்த கலக்கமும், பயமும் இன்றைய இளைஞர்கள் எதிர்கொள்ளும் பெரிய போராட்டங்களாகும். தேர்வுகள், உறவுகளைக் குறித்த கவலை, எதிர்காலத்தில் என்ன நடக்குமோ என்ற பயம் ஆகியவை நம்மை மேற்கொள்ள முயற்சிக்கலாம். ஆனால், இயேசு ஏற்கனவே பயத்தின்மேல் வெற்றிச் சிறந்துள்ளார் (யோவான் 16:33). அவரது வெற்றியின் மூலம் நம் வாழ்வை அவர் ஆளுகை செய்கிறார் என்று நம்பலாம். பயம் நம்மை பட்சிப்பதற்கு பதிலாக, அவர் நமக்கு ஏற்கனவே வழியை உருவாக்கிவிட்டார் என்று அறிந்து அவர்மேல் திட நம்பிக்கை வைக்கலாம்.

### சோதனையின் மேல் வெற்றி

தினமும் நம்முடைய நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் மூலமான அழுத்தம், நற்பண்புகளில் சமரசம் செய்துகொள்ளும்படியும், விசுவாசத்தினின்று விலகிச் செல்லும்படியும் நம்மை சோதிக்கிறது. ஆனால், இயேசு சிலுவையில் பெற்ற வெற்றியானது பாவத்தை வெறுத்து, நீதியை ஏற்றுக்கொள்வதற்கான பலத்தை நமக்கு தருகிறது. “மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்





samuel@jesuscalls.org
samueldhinakaranofficial

லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்'' (1 கொரி. 10:13) என்று வேதம் கூறுகிறது. இக்கட்டான சூழ்நிலைகளிலும் இயேசுவின் மூலம், ஸ்திரமாக நிற்கக்கூடிய பெலனையும், எது சரியென்று தேர்ந்தெடுக்கிற பெலனையும் நாம் பெற்றுக் கொள்ளுகிறோம்.

### தாழ்வு மனப்பான்மையின்மேல் வெற்றி

இன்றைக்கு அநேக இளைஞர்கள் தங்களுக்கு போதுமான தகுதி இல்லை, பாதுகாப்பு இல்லை என்று எண்ணி, தங்கள் திறமையைக் குறித்து தங்களை தாங்களே சந்தேகித்துகொள்ளும் போராட்டத்தினுள் இருக்கிறார்கள். சமூக ஊடகங்கள், மற்றவர்களோடு ஒப்பிடுதல், சமுதாயத்தின் எதிர்பார்ப்புகள் ஆகியவை பெரும்பாலும் நாம் திறமை குறைவாக இருக்கிறோமோ என்று எண்ண வைக்கிறது. ஆனால், ''நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்'' (எபேசியர் 2:10) என்று வேதத்தில் வாசிக்கிறோம். மற்றவர்கள் நம்மைக்குறித்து என்ன நினைக்கிறார்கள் என்பதல்ல; இயேசு நாம் யார் என்று சொல்லுகிறாரோ, அதுவே நம்முடைய அடையாளமாக இருக்கிறது. இதைப் புரிந்துகொண்டால், நாம் பிரமிக்கத்தக்க அதிசயமாக படைக்கப்பட்டுள்ளோம் என்பதை அறிந்து திட நம்பிக்கையுடன் தைரியமாக நடக்கலாம்.



> இயேசுவின் உயிர்த்தெழுதலானது விசுவாசிகளாகிய நாம் வெறுமனே பிழைத்திருக்கிறவர்களாக அல்ல, இயேசுவின் பெலத்தோடு வெற்றியை நோக்கி முன்னேறுகிறவர்களாக இருக்கிறோம் என்பதைக் குறிக்கிறது

### வாழ்வின் சவால்களை எதிர்கொள்ள பெலன்

வாழ்க்கை எதிர்பாராத பல்வேறு சவால்கள் நிறைந்ததாயிருக்கிறது. சில வேளைகளில் நாம் மனம் சோர்ந்து போய்விட நேரிடும். ஆனால், இயேசு ஏற்கனவே இறுதி யுத்தத்தை ஜெயித்துவிட்டபடியால், நாம் நம்பிக்கையுடனும் பெலத்துடனும் நம்முடைய பயணத்தைத் தொடரலாம் (பிலிப்பியர் 4:13). வழியில் எது நமக்கு எதிர்ப்பட்டாலும் சகித்துக்கொள்ளவும், நீடிய பொறுமையோடு இருக்கவும், அதை மேற்கொள்ளவும் நாம் தெய்வீக பெலனை பெற்றிருக்கிறோம். இயேசு பெற்ற வெற்றியானது நாம் ஒருபோதும் தனியே இல்லை, வெற்றி பெற தேவையான எல்லாம் நமக்கு இருக்கிறது என்ற நிச்சயத்தை நமக்குத் தருகிறது.

### அனுதின வாழ்க்கையில் வெற்றியுள்ளவர்களாக நடப்பது எப்படி?

வெற்றி என்னும் சத்தியத்தில் நாம் நடக்கும்போது, நாம் முற்றும் ஜெயம்பெற்றவர்களாக ஜீவிக்கிறோம். அதற்கான சில நடைமுறை வழிகள்:

**தேவனோடு இணைந்திருங்கள்** - ஜெபிக்கவும் வேதம் வாசிக்கவும் தேவனை ஆராதிக்கவும் நேரம் ஒதுக்குங்கள். நாம் எந்த அளவுக்கு அவரைக் கிட்டிச் சேருகிறோமோ, அந்த அளவுக்கு அவருடைய பெலன் நம்மேல் இறங்கும்.

**உற்சாகமூட்டுபவர்களோடு இருங்கள்** - உங்களுடைய விசுவாசப் பயணத்தில் உங்களை ஊக்குவித்து தாங்குகிற நண்பர்களுடன் இருக்கும்போது நீங்கள் ஸ்திரமாக இருக்கலாம்.

**உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வாக்குத்தத்தங்களை உரைத்திடுங்கள்.** விசுவாசத்தின், வெற்றியின் வார்த்தைகளைப் பேசுங்கள். உங்களைக் குறித்து தேவன் என்ன கூறியிருக்கிறார் என்பதை தினந்தோறும் நினைவுகூருங்கள்.

**தைரியத்தோடு நடந்திடுங்கள்** - விசுவாசத்தோடு நடப்பதற்கு பயப்படாதிருங்கள். தேவன் அவருடைய நோக்கத்தை உங்கள் வாழ்வில் நிறைவேற்றுவதற்கு தேவையான எல்லாவற்றையும் தந்திருக்கிறார் என்று நம்புங்கள்.

நாம் எந்த சவால்களை எதிர்கொண்டாலும், அவர் ஏற்கனவே சிலுவையில் நமக்காக ஜெயத்தை பெற்றிருக்கிறார் என்பதை அறிந்து திட நம்பிக்கையுடன் பயணிக்க முடியும். பயம், சோதனை, பாதுகாப்பில்லாத உணர்வு, போராட்டங்கள் இவை அல்ல; நாம் யாரென்று இயேசுவே தீர்மானிக்கிறார். அவருடைய அன்பு, வல்லமை, கிருபை ஆகியவை அனுதின வாழ்க்கையை தைரியத்தோடு வாழவும், அவருக்குள் நாம் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாக இருக்கிறோம் என்று அறிந்துகொள்ளவும் உதவுகிறது. நாம் அவருக்குள் முற்றும் ஜெயம் கொள்ளுகிறவர்களாக இருக்கிறோம் என்பதை அறிந்து, அனுதின வாழ்க்கையை தைரியமாக வாழ்வதற்கு அவருடைய அன்பும், வல்லமையும், கிருபையும் நமக்கு உதவுகிறது. இயேசு நம் வாழ்க்கையில் எல்லாவற்றிலும் ஜெயத்தை வைத்திருக்கிறார். இந்த ஈஸ்டர் பண்டிகை காலமானது இயேசு நமக்கென்று எதிர்காலத்தில் வைத்திருக்கிற அந்த வெற்றியைக் குறித்த நம்முடைய நம்பிக்கையைப் புதுப்பிப்பதாக அமையட்டும். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

# இளம் பங்காளர் திட்டம்

சிறுபிள்ளைகளும் இளைஞர்களும் தேவ ஞானத்தையும் செழிப்பையும் பாதுகாப்பையும் பெறும்வண்ணம் தொடர்ந்து ஜெபிக்கும்படி தெய்வீக வழிகாட்டுதலால் ஏற்படுத்தப்பட்டதே இயேசு அழைக்கிறார் இளம் பங்காளர் திட்டமாகும்.

**ஞானம்** - தானியேல், பாபிலோனுக்கு வாலிபனாக சிறைப்பிடித்துச் செல்லப்பட்டான். ஆனாலும் தேவ ஞானத்தினால் அவன் சிறந்துவிளங்கினான். "**இந்த நாலு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்; தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார்**" (தானியேல் 1:17). தானியேலைப்போல, படிப்பிலும் வாழ்க்கையிலும் உயரும்படி இளம் பங்காளர்கள் ஞானத்தைப் பெற்றுக்கொள்ள பிரார்த்தனை ஏறெடுக்கப்படுகிறது.

**செழிப்பு:** தானியேலைக் குறித்து தேவன் ஒரு திட்டத்தை வைத்திருந்ததினால் சிறைப்பட்டுப்போன இடத்திலும் அவன் உயர்ந்தான். "**...நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன்...அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே**" (எரேமியா 29:11) என்று வேதம் வாக்குப்பண்ணுகிறது. ஜெபத்தின் மூலம் இளம் பங்காளர்கள் படிப்பிலும், வேலையிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் வளர்ச்சியைப் பெற்றுக்கொள்கின்றனர்.

**பாதுகாப்பு** - தானியேல் விசுவாசத்தில் உறுதியாயிருந்தபடியினால் சிங்கங்களின் கெபிக்குள் போடப்பட்டான். ஆனாலும், தேவ தூதன், சிங்கங்களின் வாய்களை கட்டிப்போட்டான் (தானியேல் 6:22). இவ்வாறு, எல்லாவிதங்களில் இளம் பங்காளர்கள் தெய்வீக பாதுகாப்பை பெறுவதற்காக பிரார்த்தனை ஏறெடுக்கப்படுகிறது. பிள்ளைகள், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட தலைவர்களாக எழும்பும்படி, தானியேலை உயர்த்தியதுபோன்ற தெய்வீக வழிநடத்துதலையும் ஆசீர்வாதங்களையும் இளம் பங்காளர் திட்டத்தில் ஏறெடுக்கப்படும் ஜெபத்தின் மூலம் பெற்றுக்கொள்கிறார்கள்.

இத்திட்டத்தில் பங்காளராக இருப்பதன் மூலம் தேவனிடமிருந்து ஞானத்தையும் செழிப்பையும் பாதுகாப்பையும் பெற்றுக்கொண்ட ஆயிரக்கணக்கான இளம் பங்காளர்கள் சாட்சி பகிர்ந்துள்ளனர்.

**சகோதரி வசந்தியின் சாட்சி:**

என் குடும்பத்தில் நான் மட்டுமே ஆண்டவரை அறிந்திருந்தேன். என் கணவர் பெயர் அருணாசலம். மகன் பெயர் சரத்குமார். மகனை தேவன் நடத்துவார் என்ற விசுவாசத்துடன் இயேசு அழைக்கிறார் இளம் பங்காளர் திட்டத்தில் இணைத்தேன். அந்நேரம் முதல், தேவ கரம் அவன் வாழ்வில் செயல்பட தொடங்கியது. என் கணவர் வேலை இழந்ததால், பணக்கஷ்டத்தை எதிர்கொள்ள நேர்ந்தாலும் தேவன் எங்கள் மகன் மூலமாக எங்களை ஆசீர்வதித்தார். அவன் படிப்பை சிறந்த முறையில் முடித்ததும் வளாக நேர்முக தேர்வில் ஆறு நிறுவனங்களால் பணிக்கு தெரிந்தெடுக்கப்பட்டான். அதில் ஒரு



# திறமையான இளந்தலைமுறையை எழுப்புதல்



நிறுவனத்தில் அவன் பணிக்குச் சேர்ந்து இரண்டாண்டுகள் வேலை செய்தான்.

பின்பு அவன், சொந்தமாக எலக்ட்ரிக்கல் வியாபாரத்தை ஆரம்பிக்கும்படி பரிசுத்த ஆவியானவர் பெலப்படுத்தினார். இன்றைக்கு அவன் அநேகருக்கு வேலை கொடுக்கும் தொழிலதிபராக இருக்கிறான். உடன் படித்தவர்கள்கூட இப்போது என் மகனின் நிறுவனத்தில் வேலை செய்கிறார்கள். தொழில் நிமித்தம் அவன் பல நாடுகளுக்கு பயணிக்கிறான். அவனுக்கு திருமணமாகி மகன் இருக்கிறான். அவனுடைய மகனும் இளம் பங்காளர்தான்!

கர்த்தர் நீதிமானின் வழியை அறிந்திருக்கிறார்; அவனை கண்ணோக்குகிறார்; நடைகளை உறுதிப்படுத்துகிறார்; தேசத்தில் பெலத்திருக்கும்படி அவனையும் அவன் சந்ததியையும் வர்த்திக்கப் பண்ணுகிறார் என்பதை நான் கண்டுகொண்டேன். தேவன் என் மகனை மாத்திரம் உயர்த்தவில்லை. என்னுடைய விசுவாசத்தையும் பெலப்படுத்தினார். தேவன் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் இதுபோன்ற தெய்வீக பெருக்கத்தை உண்டாக்குவாராக.

சகோதரி வசந்தியைப்போல நீங்களும் உங்கள் பிள்ளைகளை இத்திட்டத்தில் இணைத்து தேவனுடைய உச்சிதமான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

**10 மடங்கு கொடுப்பதாக பொருத்தனை செய்து தேவனுடைய மகிமைக்கு வல்லமையான சாட்சியாக விளங்கும் இன்னொரு சகோதரி:**

என் மகள் கெஸியா கிளாஸ்டன், பத்தாம் வகுப்பு தேர்வை மிகுந்த பயத்துடன் எழுதினாள். மிகுந்த கலக்கத்தின் மத்தியில் நாங்கள் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தை தொடர்புகொண்டோம். அவள் வெற்றி பெறவேண்டுமென்று ஜெப வீரர்கள் மிகுந்த ஊக்கமாய் ஜெபித்தார்கள். அவள் எடுக்கும் மதிப்பெண்களுக்கு பத்து மடங்கு தொகையை நன்றி காணிக்கையாக செலுத்துவதாக விசுவாசத்துடன் பொருத்தனை செய்தேன். தேவனுடைய பெரிதான கிருபையால் மகள் கெஸியா 482/500 மதிப்பெண்கள் பெற்றாள். நாங்கள் மிகுந்த சந்தோஷத்துடன் பொருத்தனையை நிறைவேற்றுகிறோம். தேவனுக்கே சகல மகிமையையும் துதியையும் செலுத்துகிறோம்.

- சிநேகா கிளாஸ்டன், சென்னை.

**ஊழியத்தை காணிக்கைகளால் தாங்கும்போது நீங்களும் நிச்சயமாக இதுபோன்ற பலத்த அற்புதங்களை காணலாம்.**




# இளம் பங்காளர் திட்டத்தில் இணைந்திடுங்கள்

**நீங்கள் இதுவரை இளம் பங்காளராக இணையாவிட்டால், இப்போது இணைந்து, தெய்வீக வழிநடத்துதலையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள்.**

இளம் பங்காளர் திட்டத்தில் இணைந்திட உங்கள் விவரங்களை நிரப்புங்கள்

செல்வன்./செல்வி. ................................................ பிறந்தநாள்: ................................................

தகப்பன் /பாதுகாவலரின் பெயர் ............................................ தொடர்பு முகவரி : ....................................

..................................................................................................................................................

நகரம்: ............................... பின்கோடு: ................................ மொபைல் எண்: ..................................

இமெயில்: ............................................................. வாட்ஸ் அப்..............................................

**மேலும் விவரங்களுக்கு:**

* ஜெப கோபுரம்: உங்கள் பகுதியில் அமைந்திருக்கும் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தை அணுகலாம்

* இணையதளம்: www.jesuscalls.org * இமெயில்: ypp@jesuscalls.org * தொலைபேசி எண்: 98409 00477

* முகவரி: ஜெப கோபுரம், 16, டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை 600 028.

உங்கள் பெயர், பிறந்தநாள், மொபைல் எண் போன்ற விவரங்களுடன் புகைப்படத்தை ypp@jesuscalls.org என்ற இமெயில் முகவரிக்கு அனுப்புங்கள். இளம் பங்காளர் சான்றிதழுக்கு புகைப்படம் பயன்படுத்தப்படும்.


காணிக்கையை எளிதாக அனுப்பக்கூடிய பல்வேறு வழிகளை
இந்த இதழின் 15ம் பக்கத்தில் காணலாம்

## உங்கள் பிள்ளைகள் ஞானத்திலும் அறிவிலும் தேவ கிருபையிலும் சிறந்துவிளங்கவேண்டும் என்று விரும்புகிறீர்களா?




அனுமதி இலவசம்

# DYNAMIC KIDS CAMP

2025 ஏப்ரல்/மே

"ஆகையால் ஒருவன் இவைகளைவிட்டு, தன்னைச் சுத்தி கரித்துக்கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப் பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்"
(2 தீமோத்தேயு 2:21)

**ஜெப கோபுரத்தில் 6 நாட்கள் நடைபெறும் டைனமிக் கிட்ஸ் கேம்ப்-க்கு உங்கள் பிள்ளைகளை அழைத்து வாருங்கள்**

**இந்தியா முழுவதும் அனைத்து ஜெப கோபுரங்களிலும் நடைபெறுகிறது. இசை, பாடல், நடனம், மைம், கிராஃப்ட், வண்ணம் தீட்டுதல் மற்றும் பல்வேறு விளையாட்டுகள் மூலம் பிள்ளைகளுக்கு வேதத்தின் அதிசயங்களை போதிப்போம். வேதாகம பக்தர்களைக் குறித்து அவர்கள் அறிந்துகொள்வதுடன் புதிதாக நல்ல நண்பர்களையும் பெற்றுக்கொள்வார்கள்.**

விடுமுறை நாட்களில் உங்கள் பிள்ளைகள் இயேசுவைக் குறித்து அறிந்து அனுபவிக்க உதவும் இந்த வாய்ப்பை தவறவிடாதீர்கள். பிள்ளைகளை இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்திற்கு அழைத்து வாருங்கள்!



### விவரங்கள்:

**இடம்:** உங்கள் பகுதியில் அமைந்துள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம்
**காலம்:** 6 நாட்கள்



மேலும் விவரங்களை அறிந்துகொள்ள தொடர்புகொள்ளுங்கள்
உங்கள் பகுதி ஜெப கோபுரம்
இணையதளம்: www.jesuscalls.org
மின்னஞ்சல்: prayeracademy@jesuscalls.org

**செம்பொருள்: கனத்துக்குரிய பாத்திரம்**

பெயர்: ........................................................................ பங்காளர் எண்: ................................................

பிறந்த தேதி: ......................................................... முகவரி: ..........................................................

..................................................................................................................................................................

மொபைல்: ............................................................. இமெயில்: .....................................................

இந்தக் கோடைக்காலத்தில் காணிக்கை அனுப்பி, டைனமிக் கிட்ஸ் கேம்ப் ஊழியத்தில் பங்காளராகி 20,000 பிள்ளைகள் வாழ்வில் நன்மையான மாற்றத்தை உண்டாக்கலாம்.

☐ ஒரு பிள்ளைக்கு ரூ.300/-   ☐ இரண்டு பிள்ளைகளுக்கு ரூ.600/-

☐ நான் ................ பிள்ளைகளுக்காக ரூ............. அனுப்புகிறேன்.

டைனமிக் கிட்ஸ் கேம்ப் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்பும் எளிய வழிகளை இந்த இதழின் 15ம் பக்கத்தில் காணலாம்.

Scan QR Code



# ஜிம் & ஜெமி

## நன்றி வெகுமதி
















**கதையின் நீதி:**

நன்றியறிதலுடன் செய்யப்படும் சிறு செயலும் ஆசீர்வாதமாக அமையும்; மறக்க இயலாத இனிய நினைவை தரும்.

மனப்பாட வசனம்:

**"கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது"**

(சங்கீதம் 107:1)

# Karunya
CHRISTIAN SCHOOL

ARISE AND SHINE

Affiliated to CBSE (1930600)

Founder: **Dr. Paul Dhinakaran**

## ADMISSIONS Open 2025

**APPLY NOW!**

Scan QR Code to Start the Admission Process

Karunya Christian School

## NURTURING THE FUTURE



For Classes

## PRE-KG to XII

**Streams Offered in CLASS-XI Science & Commerce**

**FOR DAY-SCHOLARS AND HOSTELLERS**





**ENROLL NOW**

**Contact: 0422-2614830/31**
**94421 06409**

**kcs@karunya.edu**
**www.kcs.edu.in**

Karunya Nagar, Siruvani Main Road,
Coimbatore - 641 114.



# இன்றைய இறை தியானம்

## ஏப்ரல் 2025

**1** **சங்கீதம் 37:4 - இருதயத்தின் வேண்டுதல்களை அருளும் தேவன்**
**தியானத்திற்கு:** ஆதி. 25:21; யாத். 8:30,31; லூக்கா 1:13

**2** **1 யோவான் 4:4 - கர்த்தர் பெரியவர்**
**தியானத்திற்கு:** யாத். 18:11; 2 சாமு. 7:22; 2 நாளா. 2:5; எரே. 10:6

**3** **எரேமியா 20:11 - கர்த்தர் நம்மோடிருக்கிறார்**
**தியானத்திற்கு:** ஆதி. 28:15; உபா. 31:8; யோசுவா 1:5; 1 நாளா. 28:20

**4** **எபிரெயர் 6:14 - கர்த்தர் உங்களை பெருகப்பண்ணுவார்**
**தியானத்திற்கு:** ஆதி. 17:2; உபா. 30:5; ஏசாயா 54:3; எசே. 36:30,37

**5** **சகரியா 9:12 - இரட்டிப்பான நன்மை**
**தியானத்திற்கு:** உபா. 1:11; 2 சாமு. 24:3; யோபு 42:10; ஏசாயா 61:7

**6** **உபாகமம் 28:8 - உங்கள் களஞ்சியங்கள் ஆசீர்வதிக்கப்படும்**
**தியானத்திற்கு:** சங். 144:13; நீதி. 3:10; யோவேல் 2:23,24; மத். 13:30

**7** **சங்கீதம் 16:5 - கர்த்தர் நம் சுதந்தரம்**
**தியானத்திற்கு:** எண். 18:20; உபா. 10:9; 18:2; யோசுவா 13:33

**8** **2 நாளாகமம் 14:11 - தேவன் உங்களுக்கு உதவி செய்வார்**
**தியானத்திற்கு:** சங். 79:9; மாற்கு 9:17-27; ரோமர் 8:26; எபி. 2:18

**9** **சங்கீதம் 28:7 - தேவன் நமக்கு கேடகமாயிருக்கிறார்**
**தியானத்திற்கு:** ஆதி. 15:1; 2 சாமு. 22:3; நீதி. 2:7; 30:5

**10** **ஆதியாகமம் 17:7 - நித்திய உடன்படிக்கை**
**தியானத்திற்கு:** லேவி. 26:45; எரே. 32:40,41; எசே. 16:60; அப். 3:25

**11** **யோசுவா 1:9 - கர்த்தர் உங்களோடு இருக்கிறார்**
**தியானத்திற்கு:** யோசுவா 3:7; நியா. 6:13-16; ஏசாயா 43:5

**12** **உபாகமம் 2:7 - உங்கள் கைகளின் கிரியையில் ஆசீர்வாதம்**
**தியானத்திற்கு:** உபா. 15:9,10; யோபு 1:10; சங். 1:3; கொலோ. 3:23,24

**13** **நீதிமொழிகள் 8:21 - நீதியின் வழி**
**தியானத்திற்கு:** சங். 5:8; நீதி. 11:5; ஏசாயா 45:13; ஓசியா 14:9

**14** **சங்கீதம் 23:2 - கர்த்தர் நம் மேய்ப்பன்**
**தியானத்திற்கு:** ஏசாயா 40:11; யோவான் 10:11,14-16; எபி. 13:20

**15** **நீதிமொழிகள் 10:22 - கர்த்தர் ஐசுவரியத்தைத் தருகிறவர்**
**தியானத்திற்கு:** ஆதி. 26:12,13; 2 நாளா. 1:11,12; ரோமர் 10:12

**16** **யோவான் 14:14 - இயேசுவின் நாமத்தில் கேளுங்கள்**
**தியானத்திற்கு:** மத்தேயு 7:7,8; யோவான் 16:23,24; லூக்கா 11:10

**17** **சங்கீதம் 122:7 - சமாதானம், சுகம்**
**தியானத்திற்கு:** ஏசாயா 32:17,18; சகரியா 1:11; மாற்கு 5:34

**18** **நீதிமொழிகள் 3:26 - கர்த்தர் உங்களைக் காக்கிறவர்**
**தியானத்திற்கு:** யாத். 23:20; 1 சாமு. 2:9; சங். 121; ஏசாயா 52:12

**19** **சங்கீதம் 107:8 - நன்மையினால் நிரப்புகிறார்**
**தியானத்திற்கு:** சகரியா 1:17; லூக்கா 1:53; அப். 14:17

**20** **எரேமியா 31:9 - செம்மையான வழியில் நடத்தும் தேவன்**
**தியானத்திற்கு:** சங். 5:8; 27:11; நீதி. 4:11; யோவான் 14:6

**21** **சங்கீதம் 85:12 - கர்த்தர் நன்மையானதைத் தருவார்**
**தியானத்திற்கு:** சங். 23:6; எரே. 32:40-42; மத். 7:11; யாக். 1:17

**22** **ஏசாயா 54:14 - நீங்கள் ஸ்திரப்பட்டிருப்பீர்கள்**
**தியானத்திற்கு:** சங். 27:14; 1 கொரி. 1:8; 1 தெச. 3:13; 2 தெச. 3:3

**23** **சங்கீதம் 94:18 - தாங்கும் கிருபை**
**தியானத்திற்கு:** 1 இராஜா. 8:23; சங். 17:7; 2 கொரி. 9:8

**24** **நீதிமொழிகள் 28:25 - கர்த்தரை நம்புகிறவன் செழிப்பான்**
**தியானத்திற்கு:** சங். 125:1; நீதி. 16:20; எரே. 17:7

**25** **சங்கீதம் 103:4 - கிருபை, இரக்கம்**
**தியானத்திற்கு:** யாத். 33:19; நெகே. 9:31; சங். 145:8; புல. 3:22

**26** **ஏசாயா 50:7 - கர்த்தர் நமக்குத் துணை**
**தியானத்திற்கு:** ஆதி. 49:25; 2 நாளா. 14:11,12; ஏசாயா 41:13,14

**27** **நாகூம் 1:7 - கர்த்தர் நமக்கு அரணாயிருக்கிறார்**
**தியானத்திற்கு:** 2 சாமு. 22:33; சங். 28:8; 31:2; யோவேல் 3:16

**28** **சங்கீதம் 116:2 - செவி கொடுக்கிற தேவன்**
**தியானத்திற்கு:** நியா. 13:9; 2 நாளா. 13:14-16; சங். 3:4; மத். 20:29-34

**29** **நீதிமொழிகள் 13:21 - நீதிமானுக்கு நன்மை வரும்**
**தியானத்திற்கு:** சங். 58:11; ஏசாயா 3:10; எரே. 32:40-42

**30** **மத்தேயு 7:8 - கேட்பதைக் கொடுக்கிற தேவன்**
**தியானத்திற்கு:** மாற்கு 4:24; 11:24; லூக்கா 11:9; யோவான் 16:24



**இன்றைய ஆசீர்வாதத்திற்காக Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர் இந்த சத்தியத்தை விளக்கி ஜெபிப்பதைக் காணுங்கள்**

இணையதளம் : www.jesuscalls.org
ஃபேஸ்புக்: Jesus Calls Tamil
யூடியூப்: JesusCalls சப்ஸ்கிரைப் செய்திடுங்கள்

ஃபேமிலி சேனல் மொபைல் செயலி
ஃபேமிலி சேனல்: இணையதளத்தில் www.familychannel.org

# கிறிஸ்துவின் இரத்தம் மரணத்தை ஜெயிக்கும்



- சகோதரி **ஸ்டெல்லா தினகரன்**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது அடிச்சுவடுகளை நாம் தொடர்ந்து வரும்படி நமக்கு ''மாதிரியை'' வைத்துப்போனார் என்று, 1 பேதுரு 2:21-ல் நாம் வேத புத்தகத்தில் வாசிக்கிறோம். ஆகவே, அவருடைய வாழ்க்கையைக் குறித்து நாம் வேதத்தில் கவனமாக வாசித்து, அவர் வாழ்ந்து காட்டியபடியே, நாமும் அவரது மாதிரியை பின்பற்றி நடந்து, தேவ சித்தத்தை நம் சொந்த வாழ்வில் பரிபூரணமாய் நிறைவேற்ற வேண்டும்! யோவான் 6:38-ல் ஆண்டவர் கூறுவதாவது:

**''என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பிய என் பிதாவின் சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன்''**

இவ்வாறாக, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த பூமியிலே மனுஷ அவதாரம் எடுத்து, ஏழைக் கோலத்தில் அவதரித்து, தேவ சித்தத்தின்படியே வாழ்ந்து, முடிவில் சிலுவையின் மரண பரியந்தம் அதை முழுவதுமாக நிறைவேற்றி, இன்றைக்கு பரலோகத்தில், தேவனுடைய வலது பாரிசத்தில் ''வெற்றி சிறந்தவராக'' வீற்றிருக்கிறார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எப்படியெல்லாம் தேவ சித்தத்தை தமது வாழ்விலே நிறைவேற்றி முடித்தார் என்று சற்று நாம் ஆராய்ந்து பார்த்து, நாமும் அவ்வாறே தேவ சித்தத்தை நம் வாழ்வில் பரிபூரணமாக நிறைவேற்றுவோம்.

**எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார்.**
(1 தீமோத்தேயு 2:4)

தேவ சித்தத்தின்படி, தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து நம்மை தமக்குரிய சொந்த ஜனங்களாக மாற்றவும், பக்தி வைராக்கியமுள்ளவர்களாக்கும்படியும், பாவமற்ற பரிசுத்தராக சுத்திகரிக்கப்படும்படியும் தம்மைத் தாமே சிலுவையிலே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார் (தீத்து 2:14). எபிரெயர் 9:14-ல் இயேசு கிறிஸ்து சிலுவையிலே அடிக்கப்பட்டு சிந்தின அவரது இரத்தம், நம்முடைய செத்த மனச்சாட்சியை, செத்த கிரியைகளற சுத்திகரித்து, நம்மை பாவமற்ற பரிசுத்தர்களாக மறுரூபமடைய செய்கிறது என்று வேத புத்தகத்தில் நாம் வாசிக்கிறோம்.

சவுல் என்னப்பட்ட ஒரு மனிதன் கர்த்தருக்கென்று மெய் சீஷர்களாகவும், பரிசுத்தராகவும் விளங்கிய ஒவ்வொருவரையும் துன்பப்படுத்தி, கோபாக்கினையின் புத்திரனாக இயேசுவுக்கு விரோதமான காரியங்களை நிறைவேற்றி வந்தான். அந்த சமயத்தில் ஒரு மதிய வேளையில், இயேசுவின் பிரசன்னத்தினால் நிறைந்த தெய்வீக ஒளியானது அவன் கண்களில் பாய்ந்தது. ஆம், ஆண்டவர் இயேசு தாமே அவனைத் தேடி வந்தார். அன்றைய நாளிலே, அவரது தெய்வீக அன்பு அவனுக்குள் பாய்ந்து, அவனை ''கிருபா பாத்திரமாக'' தலைகீழாக மாற்றி, தேவ கிருபையினால் முழுவதுமாக நிறைத்தது. 2 கொரிந்தியர் 5:17-ன்படியே, ''பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோயின; எல்லாம் புதிதாயின''. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அன்றைக்கு சிலுவையில் தம்மைத் தாமே தியாகபலியாக அர்ப்பணித்ததினிமித்தம், இன்று எத்தனை கோடிக்கணக்கான மக்களின் வாழ்விலிருந்த இருளின் அதிகாரம் யாவும் முற்றிலுமாக மாறவும், அவர்கள் கிறிஸ்துவுக்கென்று நற்சாட்சிகளாக எழும்பிப் பிரகாசிக்கவும் அவருடைய பரிசுத்த இரத்தம் அற்புத வண்ணமாக புது வாழ்வைக் கொடுத்திருக்கிறது.

என்னுடைய சொந்த வாழ்வில் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் ஏற்படுத்திய தெய்வீக மாற்றங்களையே நான் தேவனுக்கு மகிமையாகக் கூற விரும்புகிறேன். நான் ஒரு பாரம்பரிய கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தேன். ஆலயம் செல்லுவது, ஏதோ கடமைக்கென்று வேதம் வாசித்து,

சில நிமிட நேரம் மட்டுமே ஜெபம் செய்வது போன்ற மிகவும் சாதாரணமான கிறிஸ்தவ அனுபவங்களை மட்டுமே பெற்றதுதான் என் குடும்பமாகும். இந்த குடும்பத்தில், என் பெற்றோருக்கு நான்கு பிள்ளைகளில் கடைசி பிள்ளையாக நான் பிறந்தேன். என் மூத்த இரண்டு சகோதரர்களும், சகோதரியும் பயபக்தியுடன் பெற்றோருக்கு அடங்கி நல்வழிகளில் நடந்து வந்தனர். ஆனால், கடைசி மகளாகிய நானோ, அவர்களைவிட கொஞ்சம் குறும்பு, உலக ஆசை போன்ற பிசாசின் குணங்களுக்கு அதிகமாக அடிமைப்பட்டவளாக வளர்ந்து வந்தேன். என்னுடைய பதினாறாவது வயதில் கிறிஸ்துவின் சிலுவையிலிருந்து வெளிப்பட்ட தெய்வீக அன்பு எனக்குள் பாய்ந்து சென்றபடியினால், என்னையுமறியாமல் நான் கிறிஸ்துவை என் நண்பராகத் தெரிந்துகொண்டு, அவரோடு இணைந்து வாழ ஆரம்பித்தேன். அந்த நிலையில், என்னுடைய 21-ம் வயதில், சகோதரர் தினகரன் அவர்களுக்கு வாழ்க்கைத் துணையாக இணைந்தபின்பு, இயேசு கிறிஸ்துவின் மூலம் வெளிப்பட்ட சிலுவையின் அன்பினால் நான் அவரை என்னுடைய சொந்த இரட்சகராக முழுவதுமாக ஏற்றுக் கொள்ளவும், கிறிஸ்துவோடு இணைந்த வெற்றிகரமான இல்வாழ்வு வாழவும், ஆண்டவர் இயேசுவின் சிலுவையின் மகத்துவம் எனக்குள் கிரியை செய்தது.

அன்பானவர்களே, இதை வாசிக்கிற நீங்களும் உங்களுடைய சொந்த வாழ்க்கையை சற்று ஆராய்ந்து பாருங்கள். இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்திய அவரது இரத்தம் உங்கள் வாழ்வை பாவம், சாபம், அநீதி, அசுத்தம் யாவற்றினின்றும் கழுவி சுத்திகரித்து, "கிறிஸ்துவுக்குள் நான் புது சிருஷ்டி" என்று கூறும் தெய்வீக பாக்கியம் நிறைந்த வாழ்வை நீங்கள் பெற்றுக் கொண்டுவிட்டீர்களா? இல்லையெனில், இன்னும் நீங்கள் பிசாசுக்கும், மாம்சத்திற்கும் அடிமைப்பட்டவர்களாயிருந்தால், இன்றே சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் கல்வாரி அன்பை நோக்கிப்பாருங்கள்! இந்த நாட்களில் நாம் அதை விசேஷமாக தியானிப்பதோடு நிறுத்திவிடாமல், இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்திய பரிசுத்த இரத்தத்தினால் கழுவப்பட்ட பரிசுத்தமும், தெய்வீகமானதுமான வாழ்வை பெற்றுக்கொள்ள சிலுவையண்டையில் வாருங்கள். உங்கள் பாவங்களை முழு மனதுடன் அறிக்கையிட்டு, சவுல் பவுலாக மாறும் பொழுது ஆண்டவரிடம் கேட்டதுபோல், "ஆண்டவரே! நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" (அப்போஸ்தலர் 9:6) என்று நீங்களும் தாழ்மையுடன் கேட்டு அவரிடமிருந்து தெய்வீகமான புது வாழ்வைப் பெற்று ஆசீர்வாதமாக வாழுங்கள்.

**இயேசு கிறிஸ்து சிலுவையிலே அடிக்கப்பட்டு சிந்தின அவரது இரத்தம் நம்மை பாவமற்ற பரிசுத்தர்களாக மறுரூபமடைய செய்கிறது**

**"...தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் (கர்த்தருக்குள்) நிலைத்திருப்பான்"**
(1 யோவான் 2:17).

சவுல் கேட்டின் மகனாயிருந்தான். தேவ கிருபையினால் அவன் "கிருபா பாத்திரமாக" கர்த்தருக்கென்று மறுரூபமாக்கப்பட்டான். அவனுடைய நம்பிக்கை அதன் பின்பு என்னவாயிருந்தது? கலாத்தியர் 2:20-ன்படி,

**"இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். என்னில் அன்புகூர்ந்து எனக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவ குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத் திருக்கிறேன்"**

என்று தன் வாழ்வின் மாற்றத்துக்கான காரணத்தை கூறுகிறான். அன்பானவர்களே, நாமும்கூட அவ்வாறே இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்ட தெய்வீகமான இரட்சிப்பின் வாழ்வைப் பெற்றபின்பு, தேவ சித்தத்தை முழுவதுமாக நிறைவேற்றும் தெய்வீக வாழ்வை விசுவாசத்தோடுகூடிய வைராக்கிய பக்தியோடு நிறைவேற்ற வேண்டும்.

நம் அன்பு சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன் அவர்கள், இரட்சிப்பின் ஆசீர்வாதத்தை பெற்றவுடன்தானே, தனது 20-ஆம் வயதிலிருந்தே கர்த்தருடைய பாதத்தை உறுதியாய் பற்றிக் கொண்ட வாலிபனாக, நற்சாட்சியாக, நற்கிரியை நிறைந்த வாழ்வை பயபக்தியோடு நடத்தி வந்தார். சவுல் பவுலாக மாறி, கர்த்தருக்கென்று வைராக்கியமாக முழு விசுவாசத்துடன் உழைத்து, தேவ சித்தத்தை பரிபூரணமாக நிறைவேற்றினார். அதே போன்று சகோதரர் அவர்களும் தன் இளம் வாலிப வயதிலிருந்தே கர்த்தருக்கென்று பக்தி வைராக்கியத்துடன் உழைத்து, தேவ சித்தத்தை முழு விசுவாசத்துடன் செயல்படுத்தினார். ஆகவே, கர்த்தர் அவரையும், அவரோடுகூட தங்களை அர்ப்பணித்த எங்கள் முழு குடும்பத்தையும் அதே விசுவாசத்தினால் நிரப்பி, தேவ சித்தத்தை நிறைவேற்றும் தெய்வீகமான பாக்கிய வாழ்வை ஆச்சரியமான விதத்தில் அருளிச்செய்து, இன்று வரை அநேகம் ஜனங்களுக்கு ஆசீர்வாதமான முறையில் உபயோகித்து வருகிறார்.

அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே! கர்த்தர் உங்கள் வாழ்விலும்கூட தமது தெய்வீக சித்தத்தை இவ்வாறே நிறைவேற்ற வாஞ்சையுள்ளவராயிருக்கிறார். உங்கள் உள்ளம் இவ்வாறு தேவ சித்தத்தை நிறைவேற்ற வாஞ்சிக்கிறதா?

தேவ மனிதனாகிய தாவீது,

**"மானானது நீரோடைகளை வாஞ்சித்துக்**

**கதறுவதுபோல, தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன் மேல், ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக் கிறது; நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?''** (சங்கீதம் 42:1,2)

இவ்வாறு வாஞ்சித்துக் கதறுகிறான். அதேவண்ணமாக, இதை வாசிக்கிற நீங்களும் உடன்தானே நீங்கள் இருக்கு மிடத்தில் பணிவுடன் முழங்கால்படியிட்டு கைகளைக் கூப்பி, கர்த்தரை நோக்கிக் கதறுங்கள். ''ஜெபத்தைக் கேட்கிற நம் அன்பின் தேவன்'' (சங்கீதம் 65:2) நீங்கள் மன மகிழ்ச்சியோடு உங்கள் இருதயங்களில் செய்யும் வேண்டுதல்களுக்கு உடனடியாக பதில் தருவார். நீங்கள் விரும்புகிறதற்கும் வேண்டுகிறதற்கும் மேலாக, தேவ சித்தத்தின்படி உங்களை அருமையான விதத்தில் வழி நடத்தி, கர்த்தருக்குள் நிலைத்திருக்கும் தெய்வீகமும், மேன்மையும் நிறைந்த வாழ்வை உங்களுக்கு அருளிச் செய்து, உங்களை ஆசீர்வதிப்பார். இவ்விதமான மேலா னதும், ஆசீர்வாதமுமான தெய்வீக வாழ்வை எங்க ளுக்கும் குடும்பமாகக் கொடுத்து அற்புதமான விதத்தில் வழிநடத்தி வரும் தேவாதி தேவனுக்கு நாங்களும் நன்றியோடு துதிகளை செலுத்தி, அவருக்குள் களிகூர்ந்து மகிழுகிறோம். அதே வண்ணமாக, இதை வாசிக்கிற நீங்களும் நிறைவாய் ஆசீர்வதிக்கப்பட கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொரு வருக்கும் கிருபைபுரிவாராக.

**இயேசு கிறிஸ்துவின் சரீரம் பலியிடப்பட்டதால், தேவ சித்தப்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்.**
(எபிரெயர் 10:10)

**''...பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மை சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகு தலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்''.**
(2 கொரிந்தியர் 7:1)

மல்கியா 2:11-ல், ''கர்த்தர் பரிசுத்தத்தை சிநேகிக் கிறார்'' என்று வாசிக்கிறோம். ரோமர் 6:19-ன்படி, ''...இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங் கள்''. 2 தெசலோனிக்கேயர் 2:13-ல், பவுல் 1 தெசலோனிக் கேயர் சபைக்கு, ''நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப் படுகிறதினாலும் சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படி, ஆதி முதல் தேவன் உங்களை தெரிந்துகொண்டார்'' என்று எழுதுகிறார்.

பிரியமானவர்களே, இரட்சிப்பைப் பெற்று, அதோடு நின்றுவிடாமல், எபேசியர் 4:11,15 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கிறபடியே, ''கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும் நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர வேண்டும்''. இந்தவிதமான ஆவிக்குரிய வளர்ச்சியைப் பெற, எபேசியர்4:23,24-ல் வாசிக்கிறபடியே,

**''உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர் களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்ளுங்கள்''**

**இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்திய அவரது இரத்தம் உங்கள் வாழ்வை பாவம், சாபம், அநீதி, அசுத்தம் யாவற்றினின்றும் கழுவி சுத்திகரிக்கிறது**

தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை நாம் தரித்துக்கொள்வது அவசியமாயிருக்கிறது. அப்படிப் பட்ட தெய்வீக வாழ்விலே நீதி, பரிசுத்தம் நிறைந்த தெய்வீக சாயல் காணப்படும். எனக்கு அருமையான வர்களே, இந்தவிதமான தெய்வீக அனுபவங்கள் நிறைந்த பரிசுத்தமான வாழ்வை பரிசுத்த ஆவியானவர் நமக்கு அருளுவார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்திய இரத்தம், அவரை, மரணத்தை ஜெயித்து உயிரோடெழச் செய்தது. அதன்பின்பு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத் தினால் பெற்ற தெய்வீக வல்லமை, மூலம் இன்று அவர் ஜெயம் பெற்றவராய் பரலோக ராஜ்யத் தில் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். அதுபோல, நாமும் இந்த உலகத்தில் பாவம், சாபம், அநீதி, அக்கிரமம் யாவற்றினின்றும் வெற்றி பெற்றவர்களாக கிறிஸ்துவுக் கென்று நற்சாட்சிகளாக எழும்பிப் பிரகாசிக்கும் தெய்வீக வாழ்வைப் பெற்றுக்கொள்ள, அவரைப்போல அப்போஸ்தலர் 10:38ன்படி, பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட வேண்டும். ஆண்டவருடைய சீஷர்கள் அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் வாசிக்கிறபடி, ஆண்டவர் இயேசு பெற்ற அபிஷேகத்தினால் நிரம்பி, கிறிஸ்துவுக்குள் அனல் பெற்றவர்களாக தேவ வல்லமை யால் நிறைந்து, நற்சாட்சிகளாய் எழும்பி கனிகொடுத்தார்கள்.

பிரியமானவர்களே, உங்கள் வாழ்வின் நிலையை சற்று ஆராய்ந்து பாருங்கள். மேலே நாம் கண்ட தெய்வீக மான வாழ்வைப் பெற்றவர்களாக, கிறிஸ்துவின் மாதிரி யைப் பின்பற்றி, அவருக்கு மகிமையாய் நற்சாட்சிகளாக நற்கனி தந்து அவரை மகிமைப்படுத்துகிறோமா? அல்லது இருள் நிறைந்த லௌகீக வாழ்வை வாழ்ந்து கொண்டி ருக்கிறோமா? நம்மை தரைமட்டும் தாழ்த்தி, கர்த்தரு டைய தெய்வீக வழிநடத்துதலைப் பெற்று, நற்சாட்சி களாக விளங்க, நாமும் ஆண்டவர் நடந்த பாதையை பின்பற்றி, ஏசாயா 61:1-3 ஆகிய வேத வசனங்களின்படி, அவர் நாமத்தை மகிமைப்படுத்துகிறவர்களாக எழும்பிப் பிரகாசிப்போம்.



எஸ்தர் ஜெபக்குழு

EPG



# வாலிபப் பெண்கள் எஸ்தர் ஜெபக்குழு

## வாலிபப் பெண்கள் எஸ்தர் ஜெபக்குழு சாட்சி

எனது தாயார் எஸ்தர் ஜெபக்குழுவில் மூத்த உறுப்பினராக இருந்தபடியினால், நான் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் போதே என்னை வாலிபப் பெண்கள் எஸ்தர் ஜெபக்குழுவில் இணைத்து ஜெபிக்க வைத்தார்கள். அநேக நாட்கள் நான் என்னுடைய பள்ளி சீருடையில்தான், இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் நடைபெறும் வாலிபப் பெண்கள் எஸ்தர் ஜெபக்குழு கூட்டத்தில் கலந்துகொள்வேன். கர்த்தருடைய பெரிதான கிருபையால் நான் பத்தாம் வகுப்பு தேர்வில் நல்ல மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற்றேன். ஆனால், எங்கள் வீட்டின் பொருளாதார நிலைமையினிமித்தம் மேற்கொண்டு படிப்பதற்கான எந்த நம்பிக்கையும் இல்லாத சூழ்நிலையில் காணப்பட்டேன். அப்போது, என்னை ஏதாவது ஆசிரியர் பயிற்சியிலாவது சேர்த்து படிக்க வைக்கலாம் என்று என் பாட்டி அநேக முயற்சிகள் எடுத்தார்கள். ஆனால், எனக்கு எந்தவொரு வாய்ப்பும் கிடைக்கவில்லை. எனினும், நான் இந்த வாலிபப் பெண்கள் எஸ்தர் ஜெபக்குழுவில் இணைந்து மற்ற வாலிப சகோதரிகளுக்காக ஜெபித்ததினிமித்தம், "யோபு தன் சிநேகிதருக்காக ஜெபித்தான், கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார்" என்ற வேத வசனத்தின்படி, கர்த்தர் என்னையும் கண்ணோக்கிப் பார்த்து, நான் 11ம், 12ம் வகுப்பு படித்து முடிக்க கிருபை செய்தார். அதுமாத்திரமல்ல,கல்லூரியில் சேர்ந்து, B.Sc., M.Sc., படிக்கவும் உதவி செய்தார்.

ஒரு முறை வானகரம் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாத கூட்டத்தில் இடம்பெற்ற குறுநாடகத்தில் நான் நடித்தேன். கூட்டத்தின் முடிவில், அந்த நாடகத்தில் நடித்தவர்களுக்காக ஜெபிக்கும்படி அன்பு தாயார் ஸ்டெல்லா தினகரன் அவர்கள் அழைப்பு விடுத்தார்கள். அப்பொழுது நான் M.Sc., கடைசி வருடம் படித்துக்கொண்டிருந்தேன். அம்மா அவர்கள் எனக்காக ஜெபித்து, நீ M.Sc., முடித்து, M.Phil. மற்றும் Ph.D. படிக்கவும், அதன்பிறகு உடனேயே ஒரு நல்ல வேலையும், கூடவே திருமண வாழ்வையும் கொடுத்து ஆண்டவர் உன்னை ஆசீர்வதிப்பார் என்று தீர்க்கதரிசனமாக சொல்லி ஜெபித்தார்கள். நானும் அந்த வார்த்தைகளை வைத்து விசுவாசத்தோடு ஜெபித்து வந்தேன். அவ்வாறே, நான் M.Sc., முடித்தபிறகு ஆண்டவர் எனக்கு M.Phil. படிப்பதற்கான வாய்ப்பை தந்தார். மேலும், என்னுடைய Guide Madam என்னை ஊக்கப்படுத்தி, Ph.D. யையும் வெற்றிகரமாக படித்து முடிக்க கர்த்தர் கிருபை செய்தார். நான் Ph.D., படிக்க கொஞ்சமும் பணவசதி கிடையாது. அப்பொழுது நான், "ஆண்டவரே, என்னுடைய படிப்பிற்கான தேவைகளை சந்திக்க எனக்கு நல்ல வேலையைத் தாரும்" என்று ஜெபித்தேன். ஆண்டவர், நான் படித்த அதே கல்லூரியிலேயே, Guest Lecturerஆக வேலை செய்ய கிருபை செய்தார். அதன்பின்பு, 2019-ல் எனக்கு திருமணம் நடந்தது. என் கணவர் பிரேசில் நாட்டில் வேலை செய்துகொண்டிருந்தார். திருமணம் முடிந்து பத்து நாட்களில் அவர் திரும்ப பிரேசில் செல்ல வேண்டிய சூழ்நிலை. நான் மூன்று மாதத்தில் செல்ல வேண்டும். ஆனால், அந்த சமயம் கோவிட் உச்சக்கட்ட நிலையில் இருந்ததால், எனக்கு Visa Process பண்ணுவதில் சிரமம் ஏற்பட்டது. அதற்காக, ஸ்டெல்லா அம்மா மிகுந்த பாரத்தோடு ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, சில தினங்களிலேயே எனக்கு Visa கிடைக்க கிருபை செய்து, நான் அற்புதமாக என் கணவரிடம் செல்ல உதவி செய்தார். மேலும், நான் அங்கு சென்ற அதே மாதத்தில் கர்ப்பம் தரிக்கவும் கிருபை செய்தார். அந்த சூழ்நிலையிலும் என்னை கவனிக்க என் தாய் என்னோடு இல்லை. என்றாலும், ஆண்டவர் என்னோடு கூடவே இருந்து என்னை அற்புதமாக பாதுகாத்து, அழகான ஒரு பெண் குழந்தையை சுகப்பிரசவத்தில் பெற்றெடுக்க கிருபை செய்தார். கர்த்தர் அதினதின் காலத்தில் எல்லாவற்றையும் நேர்த்தியாய் செய்வார் என்ற வசனத்தின்படி என்னை அவர் ஆசீர்வதித்தார்.

- **ஜாய் ரூபி வைலட்,** சென்னை.

**மேலும் விவரங்களுக்கு:** சகோதரி ஸ்டெல்லா தினகரன்,
வாலிபப் பெண்கள் எஸ்தர் ஜெபக்குழு
16, டி.ஜி.எஸ்.தினகரன் சாலை, சென்னை - 600 028.
மின்னஞ்சல்: epg@jesuscalls.org

# மீண்டும் பள்ளிக்குச் செல்ல உற்சாகப்படுத்தும் சீஷா;

## நனவாகும் கல்வி கனவு




நலிவுற்ற குடும்பங்களின் பிள்ளைகள் வளருவதற்கும், படிப்பதற்கும் முன்னேறுவதற்கும் பல்வேறு சிரமங்கள் உள்ளன. இதுபோன்ற பிள்ளைகள் சமுதாயத்தில் பழகுவதற்கு உள்ள தடைகளை உடைக்க கல்வி உதவுவதோடு, பொருளாதாரத்தில் முன்னேறவும் வழிகாட்டும். பெரும்பாலும் இதுபோன்ற குடும்பத்தினர் நீண்டகால தேவையான கல்வியைக் காட்டிலும் அன்றாட தேவைகளுக்கே முக்கியத்துவம் கொடுப்பதால், தரமான கல்வி பெறுவது இப்பிள்ளைகளுக்கு சவாலானதாக உள்ளது.

எல்லா பிள்ளைகளுக்கும் சிறப்பான எதிர்காலத்தை பெறும் உரிமை உள்ளது என்பதே சீஷாவின் நம்பிக்கை. ஆகவே, நலிவுற்ற குடும்பங்களின் பிள்ளைகளுக்கு தரமான கல்வியும், தொடர்ந்து படிப்பதற்கு தேவையான உபகரணங்களையும் வாய்ப்புகளையும் வழங்கி அவர்களை வறுமையிலிருந்து விடுவிக்க செயல் படுகிறோம்.



பிள்ளைகள் வகுப்பறையில் முழு ஈடுபாட்டுடன் இருக்கவும், தங்கள் படைப்பு திறனை வெளிப்படுத்தவும் தேவையான உபகரணங்கள் அடங்கிய ஸ்கூல் கிட்டை கொடுத்து உற்சாகப்படுத்துகிறோம். இவை பிள்ளைக ளுக்குள் நம்பிக்கையை ஏற்படுத்தி, படிப்பில் விருப்பத்தை உண்டாக்கி, குடும்பத்தின் பணக்கஷ்டத்தின் மத்தியிலும் இடைநிற்காமல் தொடர்ந்து பள்ளிக்குச் செல்ல ஊக்குவிக்கிறது.

### கல்வியால் முன்னேற்றம்



நான் மௌனிபாடா என்ற ஊரில் 4ம் வகுப்பு படிக்கிறேன். என்னுடைய தந்தை விவசாயக்கூலி வேலை செய்கிறார். வீட்டுச் செலவுடன், என்னை படிக்க வைக்கவும் செலவு செய்ய அவரால் முடியவில்லை. வருடந்தோறும் சீஷா கல்வி உபகரணங்களுடன் புத்தகப் பை தருவதால் மற்ற மாணவர்களைப்போல் நானும் கௌரவமாக பள்ளிக்குச் செல்ல முடிகிறது. எதிர்காலத்தில் மருத்துவராகவேண்டும் என்ற என்னுடைய கனவு சீஷாவின் உதவியால் நிறைவேறும் என்று நம்புகிறேன்.

- S. கார்த்திக்பாய், சீஷா ஸ்கூல் கிட் பயனாளி, குஜராத்.

இந்தியா முழுவதும் நகர்ப்புற குடிசைப் பகுதிகள், கிராமங்கள் மற்றும் மலைவாழ் சமுதாயத்தை சேர்ந்த ஆயிரக்கணக்கான நலிவுற்ற பிள்ளைகளுக்கு ஸ்கூல் கிட் கொடுத்து இந்த கல்வியாண்டிலும் அவர்கள் கல்வியை தொடர ஊக்குவிக்கும் சேவையில் சீஷாவுடன் இணைந்து கொள்ள உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

- நலிவுற்ற ஒரு மாணவன் / மாணவிக்கு சீஷா ஸ்கூல் கிட் வழங்குவதற்கு ரூ.500/- என்ற வகையில்,
- 4 மாணவர்களுக்கு ஸ்கூல் கிட் வழங்க ரூ.2,000/-
- 20 மாணவர்களுக்கு ஸ்கூல் கிட் வழங்க ரூ.10,000/-
- (நீங்கள் விரும்பும் எண்ணிக்கையில் ஸ்கூல் கிட் வழங்கலாம்)

DONATE TO SEESHA

ALL DONATIONS ARE TAX-EXEMPTED UNDER SECTION 80G

UPI ID : 9384015155@okbizaxis

UPI: G Pay, PhonePe, Paytm, UPI, pay
Wallets: OLAMONEY, freecharge, MobiKwik, JioMoney

You can also donate through www.cashfree.com/payme/seesha

044 66660000
+91 9300 600 600
www.seesha.org
info@seesha.org

* When you Donate send the Details to +91 9300 600 600

SEESHA house No.37, Gandhi Road, Tambaram (West), Chennai - 600045



Printed by G.L.B.Ernest and Published by G.L.B.Ernest on behalf of Jesus Calls and Printed at Rasi Graphics Private Limited, DP 69-71-A, Sidco Industrial Estate, Thirumazhisai, Poonamallee Taluk, Thiruvallur District. and published at 16, Dr. D.G.S. Dhinakaran Salai, Chennai - 28, Editor: G.L.B.Ernest



Karunya
DEEMED UNIVERSITY
SOLVING HUMAN PROBLEMS
NAAC Accredited A++
Accreditation
A++ Grade
B. Com and Management Programs
NATIONAL BOARD of ACCREDITATION
Engineering and Management Programs
B.Sc. (Hons.) Agriculture Program
Global Ranking
World University Rankings 2025
1201-1500 Band
CATEGORY 1 Institution UGC GoI.
ADMISSIONS OPEN 2025
KEE'25
(Online Karunya Entrance Exam)
For B.Tech.
KMAT'25
(Karunya Management Aptitude Test)
For MBA
SCHEDULED ON:
05th-06th
APRIL 2025
Learn At KARUNYA
Lead the WORLD...
Get Upto 100 % Scholarship
A WORLD-RANKED UNIVERSITY OFFERS WORLD-CLASS OPPORTUNITIES, CONNECTING YOU WITH 85+ COUNTRIES
DAY SCHOLAR FACILITY
NOW AVAILABLE FOR COIMBATORE RESIDENTS
Earn While You Learn:
Industry-Integrated Learning at Karunya
"I'm Aburaja, a 3rd-year B.Tech Data Science and Cyber Security student, working as a Software Developer at US Based Company after my classes every day. This role has allowed me to work on diverse projects, sharpen my front-end and back-end development skills, and collaborate with a dynamic team. It's been a fulfilling experience that has deepened my passion for software development."
Choose your career in:
B.Tech.
• Aerospace Engineering
• Artificial Intelligence & Data Science
• Biomedical Engineering
• Biotechnology
• Civil Engineering
• Computer Science & Engineering
• Computer Science & Engineering (Artificial Intelligence)
• Computer Science & Engineering (Artificial Intelligence & Machine Learning)
• Computer Engineering
• Electronics & Communication Engineering
• Electrical & Electronics Engineering
• Food Processing & Engineering
• Mechanical Engineering
• Robotics & Automation
M.Tech.
• Aerospace Engineering
• Biotechnology
• Biomedical Instrumentation
• Computer Science & Engineering
• Cyber Security
• Food Processing & Engineering
• Integrated Water Resources Management
• Robotics & Automation
• Structural Engineering
• VLSI Design
B.Sc.
• Forensic Science
• Information Security & Digital Forensics
• Computer Science & Media Production
B.Sc. (Hons.)
• Agriculture
M.Sc.
• Agriculture (Agronomy)
• Agriculture (Genetics & Plant Breeding)
• Horticulture (Fruit Science)
• Biotechnology
• Forensic Science
• Food Science & Technology
• Information Security & Digital Forensics
• Artificial Intelligence & Data Science
B.Com.
• (Spl. in Professional Accounting and Financial Technology)
Management
• M.B.A
• Online M.B.A
Karunya Sets a New Benchmark in Placements!
2069+ OFFERS Secured by Students!
455+ Top-Tier Companies Partnered for Recruitment!
Karunya Institute of Technology and Sciences
Karunya Nagar, Siruvani Main Road, Coimbatore - 641 114. Tamil Nadu, India
E-mail: admissions@karunya.edu • Website: www.karunya.edu
Contact: 94425 03422 / 1800 88 99 888, 1800 42 54 300
APPLY NOW!
* Condition apply

REGISTERED NEWSPAPER PRGI No.TNTAM/2003/10418

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்
(யோவான் 16:20)

JESUS CALLS
PRAYING FOR THE WORLD

# இயேசு அழைக்கிறார்
# பிரார்த்தனை திருவிழா
# நெல்லை




மே 2025
**3 & 4**
சனி & ஞாயிறு
மாலை 5:30 மணி

தேவ செய்தியும் ஜெபமும்:

## Dr. பால் தினகரன்
மற்றும் குடும்பத்தினர்

இடம்:

## பிரான்சிஸ் சேவியர் எஞ்ஜினியரிங் கல்லூரி வளாகம்

வடக்கு பை பாஸ் சாலை, வண்ணாரப்பேட்டை,
திருநெல்வேலி - 627 003

6380752362
9940057233

குடும்பமாகவும் நண்பர்களுடனும் வாருங்கள்;
ஆசீர்வாதம் பெறுங்கள்.